கனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

RECEIVED
3 JAN 1972
TANJORE

"நமோ ஓம் நமக"!

ஓ! ஓ! ஓ! 'குமுதமே' தமிழ்தின்னுங் கழுதையே!
ஊர்கெடுக்கும் 'விகடன்' 'கதிரே'!
ஒப்பரிய தமிழென்னும் உண்ணீர்க் குளத்தையே
உழப்புகின்ற எருமைக் குலமே!
ஏ! ஓ! ஆ தித்தரே! 'தினத்தந்தி' 'ராணி'-யால்
எந்தமிழைக் கெடுக்கும் உருவே!
இங்கங்கெ ஞுதபடி தமிழைப் புதைக்கவே
எழுந்துலவும் இதழ்கள் இனமே!
ஈவோ, இரக்கமோ வைக்காதீர்! உங்களுக்
கிருக்கின்ற நமைச்சல் தீர,
எப்படியும் எழுதுங்கள்! எழுதிக் குவியுங்கள்!!
எல்லாமும் இலக்கியந்தான்!!!
நாவோ, வெண் மூளையோ நக்குவதில், எண்ணுவதில்
நரகலோ இழிவோ என்ன?
நல்லதமிழ் என்பதெது? நல்லநடை என்பதெது?
"நமோ ஓம் 'துக்ளக்' நமக!"

சுவடி: 9. ஓலை: 8. விலை: 75 காசு.

நமக்கு வந்த மடல்கள்.

0: 282: "தென்மொழி" கன்னி–துலை இதழ் பார்த்தேன். ஆசிரிய வுரையைப் படித்து முன்னிதழ்களில் வந்த ஆசிரியவுரைகளையும் முன்பு வந்த அன்பர் மடல்களையும் நினைவுப்படுத்தும்போது பாவலர் அரசியல் சேற்றில் இறங்க நினைக்கிறாரோ என்ற அச்சம் உண்டாகிறது. மக்களை நல்வழிப் படுத்த நினைக்கும் தலைவன் ஒன்று படை கொண்டு செயற்படுத்த வேண்டும், நபிகள் நாயகத்தைப் போல். அல்லது சொல்லின், செயலின் துணைக் கொண்டு மக்களை அணுக வேண்டும். அரசியலில் நுழைபவன் சாய்க்கடையில் விழுந்தவனை விட மானக் கேடடைவான்.

தமிழ் நாட்டில் ஓரளவு விழிப்புணர்ச்சியையும் எழுச்சியையும் ஏற்படுத்திய தி. மு. க. திருச்சி மாநாட்டில், என்று அரசியலில்—தேர்தலில் கலப்பதென்று முடிவெடுத்ததோ அன்றே அதன் குறிக்கோள் கைவிடப்பட்டது. அரசியல் சூதாட்டம் அதன் இடத்தை ஆட்கொண்டு விட்டது. இன்று கொள்கைகள் என்னென்னவென்ற நினைவு தலைவர்களுக்கு இருக்கின்றதோ? என்னவோ? எனவே பாவலருக்கு உண்மையிலேயே தொண்டு செய்ய எண்ணம் இருந்தால் அரசியல் பக்கம்சாயாதிருக்க இறைஞ்சுகிறேன். அரசியலின்றிப் பேரகரமுதலித் தொகுப்புப்பணி நடைபெறவில்லையா? அரசியலில் குழம்புகிறவர்கள் குழம்பித் தவிக்கட்டும். நாம் நம் வழியில் தொண்டாற்றலாம். அரசியல் பேசி, இருக்கும் மொழியுணர்வில் நஞ்சேற்படுத்த வழி உண்டாக்காதீர்கள். அரசியலில் இருப்பவர் நினைவை மனத்திலிருந்து அகற்றுங்கள். 'இறைமைக்காட்சி' என்ற பாவையும் மெய்வாழ்க்கை என்ற கட்டுரையையும் காணும் போது "தென்மொழி" தமிழர்களை எந்த இருளிலிருந்து மீட்டுவருவதாகக் கூறிக் கொள்கிறதோ அதே பக்கம் அவர்களைத் தன்னையுமறியாமலேயே இட்டுச் செல்ல முயல்கிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது. தமிழர்களை ஆட்டிப்படைக்கும் இனம் இக்கருத்துகளைக் கூறியே அன்றும் இன்றும் அவர்களை ஆட்டிப் படைக்கிறது. தமிழர்கள் அந்தத் தளையிலிருந்து முற்றும் விடுபடும்வரை இது போன்ற கருத்துகள் நம் வாயிலிருந்தோ எழுத்தாணியிலிருந்தோ வராது காத்துக் கொள்ளுதல் நலம். இன்று நம் பணிக்குப் பழங்கால இலக்கிய ஆய்வு அவ்வளவு பயன் தராது. அறிவியல் துறையில் எவ்வளவு தமிழ்ப்படுத்த முடியுமோ அவ்வளவு தமிழ் முன்னேறும். உயர்ந்த ஆய்வுக் கட்டுரைகளாகவோ, பாக்களாகவோ இல்லாமல் எளிய கதைகள், துணுக்குகள் ஆகியவையும் தனித்தமிழில் இருந்தால், தனித்தமிழில் ஆய்வுக் கட்டுரைகளும் பாக்களும், அறிவியல் நூல்களுந்தாம் படைக்கவியலும் என்ற அச்சம் படிப்போரிடையேயும் படைப்போரிடையேயும் மறைந்து எளிய படைப்புகளையும் ஆக்கும் துணிவு ஏற்படும்.

செ. பெரிய நாடார், தெற்குச்சூரன்குடி.

0: 283: சென்ற தென்மொழியில் பல பக்கங்கள் வீணாகிவிட்டதாகவே நான் கருதுகின்றேன். ஆனால் ஏன்தான் தாங்கள் கடவுள் இல்லையென்றுணர்ந்தும் ஓரிறைப் பேராற்றலைத் தூக்கி வைத்துக் கொண்டு ஆடுகின்றீர்களோ தெரியவில்லை. குறிப்பாக அட்டை இரண்டாம் பக்கத்தில் தாங்கள் எழுதியிருப்பது சற்றே அருவருப்பாக வுளது. இனியும் இப்படி வெளியிடாதீர்கள்.

சி. அறிவுறுவோன், அம்மையகரம்.

(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப்பக்கம் பார்க்க)

தென்மொழி

இலக்கிய இதழ்

''கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை'' எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 9: ஓலை: 8.

[நிறுவனம் தி. பி: 1990 (1959)]

நளி தி. பி. ௨௦௦௨ – (திசம்பர் – 1971.)

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

தென்மொழியின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.

பார்ப்பானையே குறை கூறிப் பயனில்லை!

ஆரிய இனம் வேறு சில இனங்களைப்போலவே உலகெங்கணும் பரந்து கிடக்கின்றது. ஆனால் அஃது இவ்விந்திய நிலத்தொகுதியுள்–குறிப்பாகத் தென்னாட்டுத் திரவிடரிடை – தமிழரிடை மிகுந்த அளவில் ஊடுருவி இரண்டறக் கலந்துள்ளது போல் வேறெந்த இனத்தோடும் அவ்வாறு கலப்புக் கொண்டதில்லை. அதற்கு வரலாற்று நிலையில் பல கரணியங்களைச் சொல்லலாம். அவற்றுள் ஒன்று, பிற நாட்டு மக்கள் ஆரியரைப் போல் வெள்ளைமேனியராகவே இருக்க, தென்னாட்டவர் மட்டும்–தமிழர்மட்டும் கறுத்த மேனியராய் இருந்தமையால், அவர்கள்பால் தங்களை நிலத்தேவர் என்று கூறி ஏமாற்றுவதற்கும், அவர்கள் வளங்களை கொள்ளையடித்து வயிறு வளர்ப்பதற்கும் இவர்களுக்கு

எளிதாகவிருந்தது. அத்துடன் தமிழர்கள் பொதுநிலைப் பண்பின ராயும் தீவினைக்கஞ்சும் தெய்வ நம்பிக்கை யுடையவராகவும், வந் தவரை விருந்தோம்பும் அறவுணர்வினராயும், பகைவர்க்கும் உதவும் அன்புணர்வுடையவராகவும் விளங்கி வந்தமை, அவர்கள் தங்கள் இருப்பிடத்தைத் தென்னாட்டிலேயே பெரிதும் நிலைப்படுத்திக் கொள்ள வாய்ப்பாக விருந்தது. ஆனால் இது மூவாயிரமாண்டுகளுக்கு முந்திய கதை. அவ்வளவு பழங்கதை என்னினும், அன்று தொடங்கிய தமிழ ரின் வரலாற்றுச் சிதைவுக்கு இன்றும் அது கரணியமாக விளங்குவ தால், மேலும் மேலும் அதையே திரும்பத் திரும்ப நினைவு கூர வேண் டியிருக்கின்றது. மற்றபடி நம் தமிழரிடையேயும் மதத்துறையில் ஆரியத்தையும் தமிழத்தையும் வேறுபாடுணராமல் கடைப்பிடித்து வரும் சமயத்தலைவர் சிலர், "பிராமணர் தமிழருடன் வேறுபாடின்றிக் கலந்து விட்ட இந்நிலையிலும் அவர்களைப் பிரித்துப்பேசியோ, அவர் -தம் முன்னோர் செய்த செயல்களுக்காக இன்றுள்ளோரை இழித் துரைத்தோ வருவது தேவையில்லாதது; தவறானது" என்று கூறத் தான் செய்கின்றனர். எஃது எவ்வாறாயினும், ஓரினம், இவ்விருப தாம் நூற்றாண்டின் இறுதியிலும் பிறிதோரினத்தின் மனமும் மானமும் வீறு கொள்ளுமாறு தன்னைத் தேவ இனமென்று கூறி, மாந்தச் சலு கைகளை அளவுக்கு மீறிப் பெறுவதும், மற்ற இனத்தை அறவே இழிப் பதும் பழிப்பதும் அவ்வாறு தன் முன்னோரால் எழுதி வைக்கப்பெற்ற பழங்கதைக் குப்பைக் கருத்துகளை இன்னமும்விடாது கூறி அவற்றில் சொல்லப்பெற்ற சடங்கு,சம்பிரதாய, முறைகளை வலுக்கட்டாயமாகப் பின்பற்றி வருவதுமாகஇருந்து வருகையில், போலியான சில பொது வுணர்வுகளை மட்டும் கூறிப் பிறரை ஆற்றுவிப்பது என்பது இயலாத ஒன்றே. எனவே ஆரியரின் இனவழியினரான இன்றையப் பார்ப் பனர் தங்களை எந்த அளவில் திருத்திக் கொண்டு தமிழினத்தவருடன் ஒன்றியுறைந்து போக முன்வருகின்றனரோ, அந்த அளவில் தமிழ ரும் அவர்களை அரவணைத்துக் கொண்டு போகத் தயங்கார் என்பதை வெளிப்படையாகக் கூறிக் கொள்ள விரும்புகின்றோம்.

இதற்கிடையில் ஆரிய இனத்தால் பெரும்பான்மையும் அலைக் கழிக்கப்பட்டு வந்த-வரும் திராவிட இனம் என்று தங்களைக் கூறிக் கொள்ளும் தமிழினத்திற்கும் அதனின்று கிளைத்த தெலுங்கு, மலை யாளம், கன்னடம் முதலிய மொழியாளர்க்கும் ஒன்றைத் தெளி- வாக்க வேண்டியே இதனை எழுதப் புகுந்தோம். அவ்வின, மொழிக் காரர்கள் அனைவரும் இதனைப் படிக்க வாய்ப்பில்லாமற் போகுமென் றாலும், அவர்களுள் வாய்ப்புக் கிடைத்த ஒருசிலரேனும் இக்கட்டுரைக் கருத்துகளை ஊன்றிப் படித்து எண்ணித் தெளிவதுடன் பிறர்க்கும் எடுத்துக்கூறுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

பொதுவாக, இன்றைய நிலையில் பிராமணர்கள் எனப்பெறும் ஆரியப் பார்ப்பனர்கள் மக்கள் தொகையில் மூன்று அல்லது நான்கு விழுக்காட்டினரே! இவ்வளவு மிகச் சிறிய அளவினரான ஓரின மக்கள், மிகமிகப் பெரும்பான்மையினரான பிறரை அடக்கியாள்வ தாகவோ, ஏமாற்றுவதாகவோ-குறைகூறப் பெறுவதற்கு முந்தைய

வரலாற்றில் எங்கேனும் ஓரிடத்தில் பேரளவில் ஒரு தொய்வு ஏற்பட்டிருக்க வேண்டும். அதுவும் தன்னம்பிக்கை குறைந்த அளவிலோ, அளவுக்கு மீறிய நம்பிக்கை தங்கள் அறிவை மழுக்கிய அந்நேரத்திலோதான் அச்சரிவு நிகழ்ந்திருக்க வேண்டும். அத்தகைய சரிவு - ஓர் இடைப்பள்ளம் — தமிழினத்தின் வரலாற்றில் நேர்ந்த தென்னவோ உண்மைதான். ஆனால் அந்நிலை ஏற்பட்டுக் கடந்த மூவாயிரமாண்டுகளாகத் தொடர்ந்து வந்துள்ளதே அதுதான் வேடிக்கையினும் வேடிக்கை! இனி, அதனினும் வியப்பான வேடிக்கை எதுவென்றால், மிகவும் பெரும்பான்மைமிக்க அவ்வினம் - அஃதாவது – நம் இனம் – தொடர்ந்து தாழ்ந்த நிலையிலேயே சாய்க்கடைப்புழுவென வீழ்ந்து கிடப்பதற்கு, அந்த மூன்று அல்லது நான்கு விழுக்காட்டுக் கூட்டத்தையே கரணியங் காட்டிப் பேசி வருகின்றோமே அது! அதை நினைக்கையில்தான் வெட்கத்தை விட்டுச் சிரித்துப் புழுங்க வேண்டியிருக்கின்றது!

தமிழர்களாயிருக்கும் நம்மை முன்னேற்றிவிட வந்த நம் தலைவர்களும் நம் எதிரிகளைச் சாடிய அளவிற்கு, நம்மையே அரித்துக் கொண்டிருக்கும் நம் இனப்பற்றின்மையையோ நம்மின் இனங் கொல்லித் தன்மையினையோ, நம்மையே நாம் கூறுபோட்டுக் கொண்டிருக்கும் அடிமுடத்தனத்தையோ குல மத வெறியாட்டங் களையோ அத்துணை வலிந்த குரலில் சாடியதில்லை. கம்பனை நாம் அவன் நம்மவரைத் தாழ்த்தும் வகையில் இராமாயணத்தைப் பாடியதற்காக, அவன் இருந்தால் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகுமளவிற்குத், திட்டித்தீர்த்திருக்கின்றோம். ஆனால் அதற்குப்பின் அத்தகைய–தொரு நிலை ஏற்படாதிருக்குமாறு நம் இனப்போக்கில் சிலதெளிவுகளை உண்டாக்கிக் கொள்ளவில்லை. கம்பவிராமாயணத்தைப் போல் அத்துணை இனக்கேடான ஒரு பாவியம் கம்பனுக்குப்பின் பாடப்பெறவில்லையாயினும், அப்படி ஒரு பாவியம் எழுந்து செய்ய வெண்டிய வேலையைப் பன்னூறு மடங்காக அவன் இராமாயணமே செய்து கொண்டிருப்பதை நாம் மறுக்க முடியாது. திறமையில் கம்பனைப் போலப் பாட எவரும் முன் வரவில்லையே தவிர, நம் இனங் கொல்லும் தற்கொலை வேலையில் கம்பனையே மிகச் சிறியவனாக்கிய தமிழன்கள் தோன்றித்தான் உள்ளனர். இந்த நிலை ஏன் என்று நமக்கு வழிக்காட்டிகளாக அமைந்தவர்கள் எண்ணிப்பார்த்ததாகத் தெரியவில்லை. இதற்குப் பார்ப்பானைக் குறைகூறிப் பயனில்லை.

அடுத்து, பார்ப்பானே உலகில் உள்ள எல்லா மதங்களுக்கும் மூடநம்பிக்கைகளுக்கும் குலக் கோட்பாடுகளுக்கும் கரணியனல்லன். ஆப்பிரிக்கக் காட்டுக் காபிரியர்கள் இனத்திலும், சீனர்களின் மூட நம்பிக்கைகளிலும், எகுபதியரின் காட்டுவிலங்காண்டி வழிபாடு களிலும் ஆரியம் புகுந்து வேலை செய்யவில்லை. உலகம் எங்–கணுமே - மக்கள் உள்ள இடங்களிலெல்லாம் மூடநம்பிக்கைகளும், மதக் கொடுமைகளும் மக்களினத்தைக் கட்டவிழ்த்துத்தாம் வந்திருக்கின்றன; வருகின்றன. அவற்றிற் கெல்லாம் பார்ப்பன இனமே கரணியமாகிவிடாது. இன்னுஞ் சொன்னால் பார்ப்பனர் தமிழகத்திற்

காலடி எடுத்து வைப்பதற்கு முன்பு இங்கும் குலசமயங்கள் இருக்கத் தான் செய்தன. ஆனல் அவற்றை ஆரியர் கைப்பற்றிப் பற்பல மாறு தல்களைச் செய்து தம் இன நலத்திற்கென வடிவமைத்துக் கொண் டனர். இதை வரலாறு படித்த எவனும் மறுக்கமுடியாது. இந்த நிலையில் பார்ப்பானைக் குறைகூறியே தமிழன் தப்பித்துக் கொள்ள முடியாது. தமிழினத்துள் பார்ப்பான விடக் கொடுமையான வடி வங்கள் மிகப்பல உண்டு. அவர்களையெல்லாம் நம் இனத்தலைவர்கள் இனங்காட்டத்தவறி விட்டனர். அவர்கள் நம்மினத்துக் குள்ளேயே இருந்து செய்து வந்த கேடுகள்தாம் இன்று நம்மைத் தன்ஞய்வு செய்து கொள்ள முடியாதபடி தடுத்து விட்டன. நம்மை வீழ்த்திய வரலாற்று நாடகத்தில் நாம் நடித்த காட்சிகளே பலவாக இருக்கத்-தான் இருக்கின்றன. இவற்றை நாம் வெளிப்படையாக அவிழ்த்துப் பேச வெட்கப்பட்டுக் கொண்டிருந்தோம். தமிழினத்திற்கு நம் மூவேந் தர்களால் ஏற்பட்ட நலிவுகளும் கேடுகளும் கொஞ்ச நஞ்சமன்று. நம் இன அரசர்களைப் பார்ப்பானுக்கு அடிமையாக இருக்கச் சொன்ன மடயன் எவன்? பார்ப்பான நம் தந்நலத்திற்காக நாம் என்றும்– இன்றுகூட – விலக்கியதில்லை. அவனல் நாம் நலம் பெறுவோம் என்ருல், நம்மவனையே புறக்கணிக்கவும், ஏமாற்றவும், கவிழ்க்கவும் கூட நாம் என்றும் தயங்கவில்லை, இவற்றையெல்லாம் நம் தலை வர்கள் நமக்குச் சொன்னதாக நான் கேட்டதில்லை. நாம் நம் பெருமைகளையும் எதிரியின் சிறுமைகளையும் புட்டுப் புட்டுப் பேசிக் கொண்ட அளவில், நம் சிறுமைகளையும் எதிரியின் பெருமைகளையும் ஒரு சில நொடிகள் கூடப் பேசிக் கொண்டதில்லை. நமக்கு நாம் மருத்துவம் செய்துகொள்ள மறுத்தே வந்திருக்கின்ருேம்.

நம் சிவனிய (சைவ) மாலிய (வைணவ) சமயங்கள் என்று நாம் கொண்டவற்றில்தாம் மூட நம்பிக்கைகள் மிக்கிருந்தன. எல் லாம் வல்ல இறைப் பேராற்றல் ஒன்றை வடிவம் கொடுத்து அமைத்த முதல் இனம் தமிழினமே! ஆரியத் தெய்வங்களுக்கு வடிவங்களே இல்லை. நீரும், நெருப்பும், காற்றும் அவர்களின் தெய்வங்களாக அவர்தம் வேதங்கள் பேசுகின்றன. தமிழர்களுக்குத் தான் வடிவங்–கள் தெய்வங்களாக இடைநின்றன. மிகத் தொன்மைத் தமிழரின் தீவணக்கமான கந்தழி வணக்கம் நம்மவர்களால்தான் **கந்தன்** வடிவ மாக்கப் பெற்றது. (வடமொழி **'ஸ்கந்தம்'** '**கந்த**'ஞக மாறியதென் பது, திரவிடம் தமிழாக மாறியதென்பது போலும் பிழையானகருத்து. **தமிழமே த்ரமிள** மாகிப் பின் **திரவிடமாகத் திரிந்த** தென்பதே உண்மை) சமயத் தலைவர்களை யெல்லாம் குருக்கள் என்றும், தெய்வ வடிவங்களென்றும் வழிபாடு செய்த–செய்து வருகின்ற–பெரு மூடப் பழக்கங்கள் இன்றும் சைவர் வைணவர்க் கிடையில்தாம் மிகுந்த அளவில் பெருகியுள்ளன. மதத்தலைவர்களை யெல்லாம் – குலத்தலைவர் களையெல்லாம் கடவுளர்களாக்கியவன் நம்மவனே. ஆரியனுக்கு அன்றும் இன்றும் ஒரே வகைத் தெய்வங்களே. புதுப்புதுக்கடவுளர்க ளின் தோற்றம் நம்மவரின் மோடி வேலையே. திருவிறக்க [அவதார]க் கதைகளுக்கு ஆரியத்தில் அடிப்படையில்லை. கண்ணன் [கிருஷ்ணன்]

தமிழனே! பூசாரி முறையும் தமிழர்களுடையதே! பார்ப்பான் பின்னர் கைப்பற்றிக்கொண்டானே தவிர, அம்முறையை உண்டாக்கியவன் அவனல்லன். இதற்கெல்லாம் சான்றுகள் உண்டு. வரலாறு உண்டு. இன்னுஞ் சொன்னால் பார்ப்பான் கோயில்களைக் கட்டியதில்லை. அவனுக்குக் கோயில் கட்டத் தெரியாது. அவன் அடர்ந்த காடுகளில் தீக்குழிகளையே தெய்வ வணக்கத்திற்குரிய இடமாகக் கருதி அதனையே வழிபட்டு வந்திருக்கின்றான். கோயில்களைக் கட்டியவனும், அவற்றில் படிமங்களைப் பண்ணி வைத்தவனும், அவற்றில் ஆறுகாலப் பூசனை முறைகளைப் புகுத்தியவனும், வழிபாட்டு முறைகளை வரையறுத்தவனும் நம்மவன்தான். இவற்றின் உண்மைகளை வெளிப்படையாக நாம் பேச விரும்பியதில்லை. நம் மேலேயே நாம் குறை கூறிக் கொள்வது, சாணியைத் தெளித்துக் கொள்வது போன்ற ஒரு வெட்கத்தை நமக்கு உண்டாக்கியிருக்க வேண்டும். நம் இன வையாபுரிகளும், தெ. பொ. மீக்களும் தமிழைக் காட்டிக் கொடுக்கும் வரையில் அவனுக்கு அவனைப் பற்றித் தான் தெரியும்; நம்மைப் பற்றித் தெரியாது. இவற்றையெல்லாம் நம்மவன் நன்கு எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

இன்னும் சொன்னால், நம்மவனுக்குச் செருக்கும், தன்னலமும் மிகுதி. நம்மவனை நாம் என்றும் கை தூக்கி விட்டதில்லை. தப்பித் தவறி எங்கோ ஒருவன் கை தூக்கி விட்டாலும், அவன் தலை மேலேயே நாம் ஏறி நிற்க விரும்பினோமே யன்றி, அவனுக்கு நன்றியுணர்வு காட்டி அவனை மதித்துப்பாராட்டியதில்லை. சில வேளைகளில் அவனுக்கே நாம் குழிதோண்டி வைக்கவும் தவறியதில்லை. புறம் பேசுவது நம்மிடையில் மிகுதி. இதை நேரிடையாக ஒருவன் கேட்பானானால் அவனையே அக்குற்றத்திற்கு ஆளாக்கிவிட்டு, அவனை விட்டுப் புறம் போதலும் நம்மவரிடையே மிகுதி. நேருக்கு நேராய் வாய் திறக்க நம்மவருக்கு இன்னும் துணிவு வரவில்லை. நம் குறைகளையே குணங்களாகவும், பிறன் குணங்களையே குறைகளாகவும் நாம் கூறிக் கொண்டிருக்கும் வரை, நாம் ஓர் இம்மியளவும் முன்னேறப் போவதில்லை. இப்பொழுது முன்னேறியுள்ளதாக நாம் கருதிக் கொண்டிருப்பதும் நம் முன்னேற்றமில்லை. ஆற்று வெள்ளத்தில் தப்பித் தவறி வீழ்ந்து அடித்துச் செல்லப்படும் மரக்கட்டைகளைப் போல் நாம் எங்கோ அடித்துச் செல்லப்படுகின்றோம். நம்மில் திறமையான ஒருவனை அவன் பெற்ற அத்திறமையான அத்துறையில் பயன்படுத்திக் கொள்ள மறுக்கின்றோம். நம் எல்லாரையுமே எல்லாத்துறைகளிலும் அறிஞர்கள் என்று கூறிக்கொள்ளும் பேராசை நம் அனைவருக்கும் இருக்கின்றது. சிறிது அளவில் கற்ற மட்டிலேயே பேரளவில் பேச மேடை போட்டுக் கொள்ளுகின்றோம். ஒரு பக்கங் கூடப் பிழையின்றி எழுத வராத குரும்பைகளெல்லாம் இன்று எழுத்தாளர்களாகவும் கலைமேதைகளாகவும் உலாவரக் காண்கின்றோம். பதவி, அதிகாரம் இரண்டால் அறிவுலகத்தையே ஆளத் துடிக்கின்றோம். தமிழர்களாகிய நமக்கு வாய் நீளம்; கை மிக மிக நீளம். பிசிறு அடிக்கின்ற கருத்துரைகளையெல்லாம் துல்லிய நேர்கோடுகே

ளாக காட்டி விடப் பொழிந்து தள்ளுகின்றோம். வள்ளுவருக்குப் பின் உலகனைத்தையும் இணைத்து நோக்கிய தமிழறிஞர் ஒருவரையும் என்னால் பார்க்க முடியவில்லை.

ஆரியப் பார்ப்பனர்களை அடியூன்றத் திட்டித் தீர்க்கும் ஒரு தன்மானச் செய்தித் தாள் [பெயர் சொல்ல விரும்பவில்லை] ஆசிரியரிடம் ஒரு பால், தென்மொழித் தாள் சலுகைக்கென நான் கையேந்திப் போன நாட்களில் அவர் தமக்கு அது பற்றி ஒன்றும் தெரியாதெனக் கூறியதை, இன்றும் எண்ணிப் பார்த்து, நம்மவர்க்கு வரவேண்டிய பொதுமை உணர்வுகளுக்காக என்னைத் தீய்த்துக் கருக்கிக் கொண்டிருக்கின்றேன். இந்த நிலை இன்னும் சிறு அளவில்கூட நம்மை விட்டு நீங்கிய பாடில்லை. பாவேந்தர் பாரதிதாசனைப் பற்றி மேடைதோறும் பாமுழக்கும் ஓர் அமைச்சர், தமக்குப் பதவி வந்தபோது, அவரை அணுகிய பாவேந்தர் பெயரனுக்கு மருத்துவக் கல்லூரியில் இடந்தர உருபா பத்தாயிரத்தைப் பாவேந்தர் மகளிடமே கேட்ட நிகழ்ச்சியை நான் நன்கு அறிவேன். நம்மவர்கள் பதவியும் அதிகாரமும் வந்தவுடன் நடந்து கொள்ளும் தகவின்மை யிருக்கின்றதே, அது, பதவியும் அதிகாரமும் பெற்ற பார்ப்பான் ஒருவன் நடந்துகொள்ளும் தகவாண்மையை விட நூறுமடங்கு தாழ்ந்ததாக விருக்கின்றது. பார்ப்பனர்களையும் அவர்தம் அன்றைய இன்றையச் செயற்பாடுகளையும் தென்மொழி கண்டித்த அளவு வேறெந்த இதழும் கண்டித்ததில்லை. ஆனால் அதற்குப் பார்ப்பனர்களால் வந்த கேடுகளைவிட தமிழர்களால் வந்த கேடுகளே மிகுதி. எஃது எப்படியோ, புகழ்ச்சி நமக்குச் சுவையாக இருக்கின்றது. அது மனத்தில் இனிக்கின்றது. ஆனால் நம்மைப் பற்றிய இகழ்ச்சியுரைகள் நம் செவிகளிலும் கைப்பதில்லை.

இத்துறையில் நாம் இன்னும் சொல்லவேண்டுவனவும் விண்டு விளக்க வேண்டுவனவும் நிறையவுள. இவற்றை வேறு வழியின்றி வெளிப்படையாகவே கூறவேண்டியிருப்பதால், ஒரு சோற்றுப் பதமாகவே சிலவற்றைக் கூற வேண்டி வந்தது. ஆனால் தமிழர்கள் இவ்வளவிலேயே தங்கள் குறைபாடுகளை இன்னின்ன என்று இனங் கண்டு கொண்டு, தாம் ஆண்டாண்டுக் காலமாய் வீழ்ந்து கிடக்கும் அத்துணை இடர்ப்பாடுகளுக்கும், ஆரியப் பார்ப்பன இனமே நூற்றுக்கு நூறு கரணியம் என்று வீணே எண்ணி இறுமாந்து திரியாமல் தம் அறியாமையும், மடித்துயிலும், தந்நலமும், நடுநிலையற்ற போக்கும் பிறவுமே தம் வீழ்ச்சிக்குப் பெருங் கரணியங்கள் என்று கண்டு, தம்மை முன்னேற்றிக்கொண்டு போவதில் அக்கறை காட்ட வேண்டும் என்று தலைவணங்கி ஒவ்வொருவரையும் கேட்டுக் கொள்கின்றேன்,

—பெருஞ்சித்திரன்

நீங்கள் நெடுநாட்களாக எதிர்பார்த்திருந்த

“பாவை”

மகளிர் இதழ்

(ஆசிரியர்: புலவர் இறைக்குருவனார்)

விரைவில் வெளிவரவிருக்கிறது! விளக்கம் பின்னர்!

நூறாசிரியம்

பெருஞ்சித்திரன்

(துரை-மாணிக்கம்)

பாட்டு: ௫௧ (விரிப்பு—தொடர்ச்சி)

இனி, அடுத்து வரும் அடிகள் முதலடி முதற் சொல்லாகிய "அவன்" என்பதற்குப் பரியாய பொருள் விளக்கமாக வருவனவாம். என்னை? **எவன் அறிகும் இறையவன் கிடக்லக** எனும் கூற்றின்கண் உள்ள "எவன்" என்னும் வினவுள் மாந்தவினத்துள்ள யாவரும் அடங்குவரோ எனின், அடங்குவர் என்க.

இனி, அவருள்ளும் இயக்கம், அதன் மேலெழுந்த வினை; அதன் கருவாய நசை, அதன் பருவாய எடுப்பும் படுப்பும் சான்ற வலிமையும் மெலிமையும், அவை பற்றி நின்ற பொறிகளின் முனைப்பும் என இவ்வனைத்து நிலைகளானும் சிறந்து விளங்கும் நுண்ணுணர்வினோரே மேல்வரையினராக ஈண்டுக் குறிக்கப் பெற்றார் என்க. பெறவே, அவர்க்குரித்தாகிய வினையும் நசையும் பொறியும் முனைப்பும் அறிவும் தெளிவும் முறையே விளக்கப்பெறும்.

விசைப்பே, கவண்முகத்து உருவிய சிறுகல் போல அளவிடைப் பொழுதே: கவண் முகத்து வைக்கப்பெற்ற சிறுகல்லின் இயக்கம் **உருவியதும் ஓடியதும் உறுத்ததும்** என ஓரிரு நொடிப் பொழுதிலேயே நடைபெறுதல் போல், அவனின் இயக்கமும் **உயிர்ப்பும். வாழ்வும், முடிவும்** என்ன ஒரு சிறு இடைப் பொழுதிலேயே நடைபெறுகின்ற தன்மையுடைத்து.

இனி. ஒரு குறி நோக்கி வீசப்பெற்ற அக் கவண்கல், ஓரிரு நொடியிலேயே தன் இலக்கைத் தொட்டு இயக்கத்தை முடிப்பதாய் இருக்க, அஃது அவ்விடைப் பொழுதிற்குள், தன்னறிவு பெறுதலும், தன்னை எற்றியவனை எண்ணுதலும், அவன்றன் அறிவையுணர்தலும் யாங்ஙன்? அதுபோல் இவ்வுலகின்கண் ஒரு குறிநோக்கி வீசப் பெற்ற மாந்தன், தனக்கு இயக்கமாகிய ஓரிடைப் பொழுதிற்குள் **தன்னறிவுற்று,** அதன் வழித் **தன்னுணர்வு** பெற்று, அதன்வழித் தன்னை இறுத்தானை **மெய்யறிதலும்** யாங்ஙன் இயலும் என்க. **அறிவு** என்பது ஒன்றின் புறமும் **உணர்வு** என்பது அகமும் ஆம். இவ்வுவமையால், மாந்த உயிரின் **தோற்றமும், வாழ்வும்,** முடிபும் நன்கு தெளிய வைக்கப் பெற்றன.

என்னே? **கவண்** என்றதால் இவ்வுயிர் இறைப் பொருளின் ஓராட்சி நிலையில் அடக்கப் பெற்றுக் கிடந்ததும், **முகம்** என்றதால் அவ்வகப்பாடும் இறைப் பேராற்றலின் அகத்தே உள்ளொடுங் காது, உருண்டையின் மேற்புறமும் ஒளியின் புறச்சுடரும் போல் புறப்புறமாய் ஒடுங்கி நின்ற நிலையும், **உருவிய** என்றதால், அஃதோர் இலக்குநோக்கித் தனியாட்சிநிலைக்கு எறியப்பெற்றநிலையும், அஃது அப் பேராற்றலினின்று உருவி வெளிப்பட்ட நிலையும், **சிறு** என்றதால் அவ் வுயிரின் சிற்றறிவும், சிறு வினையும், சிறுவியக்கமும் உள்ளடங்கிய சிறுமையும், **கல்** என்றதால் தன்னளவில் அவ்வுயிரேற்ற பூதவுடம்பின் இருப்பும் பருப்பும், உலகளவில் அதன் அளவும் தன்மையும், **போல்** என்றதால்உலகப் பொருள்கள் யாவும் ஒன்றுபோல் ஒன்று என்ற ஒப் புமைக் குறிப்பும், **விசைப்பு** என்றதால், கொண்டுசெலுத்தும் விசை யேற்றமும் செலுத்தக்கொள்ளும் விசையிறக்கமும், **அளவு** என்றதால் எல்லாவற்றுக்கும் அளவுண்டாம் என்னும் பேருண்மையும், **இடை** என்றதால் முதலும் முடிவும் அறியப்பெருமல் வாழ்க்கை ஒன்றே அறியப்பெற வாய்த்ததொரு நிலையும், **பொழுது** என்றதால் இரு நிலைக்கும் இடையூடாய் அமைந்த காலம் என்பதும் நுண்ணிதின் உணர்த்தப் பெற்றன என்க.

இனி, **சிறு கல்,** என்றதால் **சிறுவிசை,** (சிறுஅளவு) சிற் றளவு, சிறுபொழுது என்றும் வருமாறு உணர்க.

இனி, கவ்வுவதால் **கவண்** என்றும், முக [முன்] நிற்பதால் **முகம்** என்றும், உள்ளிருந்து புறப்படலால் [உள்–உர்–உரு] **உருவு** என்றும், கனப்பதால் **கல்** என்றும், விசும்பு(இயங்கு)வதால் **விசை** என்றும், ஒன்றின் முழுமையை அளாவுதலால் **அளவு** என்றும், புலர்தலால் **பொழுது** என்றும் சொற்பொருள் கண்டுகொள்க.

புன்செய்ப் புளியம்பட்டி

மறைமலையடிகள் மன்றத்தாரின் அருட்கொடை.

தொடக்கத்திலிருந்தே தனித்தமிழ் மலர்ச்சியிலும் **தென்மொழி** வளர்ச்சியிலும் பெரும் அக்கறையும் ஆர்வமும் காட்டி நமக்குத் தோன்ருத் துணையாய் நின்று வரும் **புன்செய்ப் புளியம்பட்டி மறை மலையடிகள்மன்றத்தார்** அவ்வப்பொழுது செய்யும் நன்கொடையுடன் அண்மையில் **தென்மொழி இதழ்** ஆக்கத்திற்கென **உருபா இரண்டாயிரம்** அருட்கொடை வழங்கியுள்ளனர். அவர்தம் அன்பின் அகற்சி யும் ஆழமும்கண்டு நம் நெஞ்சுநெகிழ்கின்றது. அவர்க்குத் **தென்மொழி** தன் செம்மார்ந்த கடமையுணர்வால் நன்றிக் கூறி கொள்கின்றது. அவர் வாழ்க! அவர் கொடைத்திறம் வளர்க! —**பெருஞ்சித்திரன்**

வினையே நசையுள வயினே: (இனி, அவ்வியக்கத்துட் பட்டவனின்) வினையோ, அவன் உள்ளத்து எழுந்த நச்சுதல் தன்மை வயத்தது. நச்சுதல்-நசை-ஆசை-அவாவுதல். ஒன்றின் உள்ளுணர்வே அவாவுதலுக் கடிப்படையும், அவ் வவாவுதலே வினைக்குஅடிப்படையும் ஆம்என்க. உள வயின் நசையும், நசைவயின் **வினையும்** எனக்கொள்க. **நலிதலும் மெலிதலும் அதனுட்பட்ட;** [இனி அவ்வினையின்] நலிவும் மெலிவும். [அவற்றின் அடியாய ஆசையின் நலிவையும் மெலிவையும் பொறுத்தன[வென்க].

நலிதல் வளத்தில் குறைதல். மெலிதல் பருமையிற் குறைதல்.

நலிதலும் மெலிதலும் கூறியதால் ஆசைக்கும் அதையொட்டியெழுந்த வினைக்கும் வளமும் பருமமும் உண்டென்க. ஆசை நிறைவேறுதலும் வினை முற்ற முழுமையுறுதலும் அவ்வவற்றின் வளத்-தையும் பருமத்தையும் பொறுத்தனவே.

ஆசை அறத்தைத் தழுவி நிற்கையில் வளமையையும், பொருளைத் தழுவி நிற்கையில் பருமையையும் எய்தும். அது, முன்னதைத் தழுவாமல் பின்னதை மட்டும் தழுவுகையில் தன்னளவுற்றுப் **பேராசை** என்றும், பின்னதைத் தழுவாமல் முன்னதை மட்டும் தழுவுகையில் தன்னளவற்று **வெற்றாசை என்றும்**. இரண்டையும் தழுவுகையில் பொதுவளவுற்று **முற்றாசை** என்றும் பெயர் பெறும். இம்மூன்று நிலைகளும் முறையே கடையும் இடையும் முதலும் ஆகும் என்க.

இனி, **பேராசை** நின்றெழுந்த வினை, **ஆரவாரமும் கொடுமையும் தன்னலமும்** நிறைந்ததென்றும், **வெற்றாசை** நின்றெழுந்த வினை **அமைவும், மிடிமையும் தன்னலமறுப்பும்** நிறைந்ததென்றும், **முற்றாசை** நின்றெழுந்த வினை **பண்பும் பயனும் பொது நலமும்** நிறைந்ததென்றும் கண்டு கொள்க.

இனி, இவ்வாசையின் அடியிரு நிலைகளும் ஒன்றின் ஒன்று தாழ்ந்தும் உயர்ந்தும் நிற்கும் நிலைகளும் உண்டு என்க. அவ்வந் நிலைகளில் அவ்வவ் வினைகளும் அங்ஙங்ஙனே பயன் கொள்ளுவும் என்க. இனி, இவ்வினைகளே நல்வினையென்றும் தீவினை என்றும் புறப்பயன் நோக்கி வகுத்துக் கூறப் பெறும். எவ்வாறாயினும் வினைக்கு அடிநிலை மன அவாவுதலே என்க.

அவை பொறி வழிய. அவ்வினைகளும் உடலின் ஐம்பொறிகளின் வழியே நடைபெறுவனவாகும்.

வினைகள் அவாவினின் றெழுந்து பொறிகளின் வழியாய் நிகழ்த்தப் பெறுகின்றன. வினை எழுச்சிக்கு அவாவுதலே கரணிய மாய் அமைந்தாலும், அவ்வினைமலர்ச்சிக்கு ஐம்பொறிகளே கருவிக ளாக அமைந்துள்ளன. அமையவே ஒரு வினை நிகழ்வு மன அவா வுதலையும் ஐம்பொறி நலத்தையும் பொறுத்த தென்க. எனவே அள விடைப் பொழுதாயமைந்த சிறுகல் விசைப்புப் போன்ற மாந்த வாழ்க்கை படிப்படியாய் ஒவ்வொரு நிலைகளையும் கரணியங்களாக உள்ளடக்கிக்கொண்டு கிடக்கின்ற தென்க.

செவ்விதின்.........அறிவினுன: இனி, அவ் வைம்பொறிக ளும் தம்முள் ஒத்தபடி முனைப்புற்று நிற்பினும் அவை உள்வாங்கும் அறிவோ ஓர் எல்லையுட்பட்டது.

செவ்விதின் அமையா ஐம்பொறி என்றதால் உலக உயிர்கள் யாவினுக்கும் ஐம்பொறிகளும் ஒத்தபடி முழுமை பெற்று நிற்பதில்லை என்க. ஒவ்வோர் உயிர்க்கும் ஒன்றோ பலவோ குறைவுற்றே இருக் கும். ஆனால் அவ்வாறின்றி எல்லாப் பொறிகளும் தம்முள் ஒத்தும் மேம்பட்டும் விளங்கினும், அவற்றின் முனைப்பிற்கும் ஓர் அளவுண்டு என்க. காட்டாகக் கட்பொறி அமைப்பை நோக்குவோம்.

ஒருவருக்குக் கட்பொறி அமைதல் ஒரு நிலை. அஃது அழகான வடிவாய் இருப்பது ஒரு நிலை. பின் அது துல்லியமாயிருத்தல் ஒரு நிலை. அடுத்து அது பித்தநீரானும், பீளைமலங்களாலும், சூடானும் குளிர்ச்சியானும் தாக்கப் பெறுமல் தூய்மையுற்றிருத்தல் ஒரு நிலை. அதன் பின், அது கூச்சம், அரிப்பு, மழுக்கமின்றியிருத்தல் ஒரு நிலை; அத்துடன் அஃது ஒளிக்குருடு, நிறக்குருடு போலும் குறையின்றி யிருத்தல் ஒரு நிலை. இப்படித்தாய் பல நிலைகளிலும் அது குறை யற்று நிறைவுற்றிருப்பினும், அதனால் மிகத் தொலைவில் உள்ள விண்மீனையோ, நேராக வன்றி வளைந்து செல்லும் நிலப்பரப்பி னையோ, காணுதல் கூடுமோ? கூடாதென்க. இனி, அது காணக் கூடிய எல்லைப் பரப்பு என்பது ஒன்றுண்டே, அதுதான் அதன் எல்லை என்க. அந்நிலை பலர்க்கும் பலவாருக வேறுபட்டு நிற்கும்,

இவ்வாறு நம் புறப் பொறிகளான ஐம்பொறிகளும் ஒரு சிறு குறைபாடும் அற்றனவாகி யிருந்தாலும் நம்மால் இவ்வுலகில் மிக மிகச் சிறு பயனையே பெறுதல் இயலும்.

பொறிகளின் ஈர்ப்புத் திறனையே அறிவு என்கிறோம். ஈர்ப்புத் திறனே வாங்கும் அறிவு என்று ஈண்டு சொல்லப்பெற்றுள்ளது.

[தொடரும்]

தொடர்: 1

தொல்காப்பிய வளம்

-புலவர் இறைக்குருவனார்

முன்னுரை:

காலவெள்ளத்தின் அலைக் கைகட்குச் சிக்காமல் இன்றளவும் நின்று நிலவும் ஆட்சியும் மாட்சியும் மிக்கது தொல்காப்பியம். தமிழ் நூற்பயிற்சி நிரம்ப வேண்டுவார் எவர்க்கும் இத்தொல்காப்பியப் பயிற்சி இன்றியமையாததாகும். இனிமையும் எளிமையும் வாய்ந்ததே யாயினும் கால இடையீட்டானும், செறிவார்ந்த நூற்பாக்களால் யாக்கப் பெற்றிருத்தலானும், பிற்றைக் காலச் சிற்றிலக்கணப் பயிற்சி தலையெடுத்தமையானும், பிறமொழித் தாக்குதல்களால் நந்தமிழ் மக்கள் மொழித்துறையில் அலமந்து தளர்ந்து கிடத்தலானும் தொல்காப்பியம் இற்றை நாளில் கடினமானதாக அறிமுகப்படுத்தப் பெறுகின்றது.

தொல்காப்பியம் முழுவதற்கும் உரையாசிரியர் இளம்பூரண அடிகள், நச்சினார்க்கினியர் ஆகியோர் உரையும், சொல்லதிகாரத்துக்கு மட்டும் சேனாவரையர், கல்லாடர், தெய்வச்சிலையார் ஆகியோர் உரையும், பொருளதிகாரத்து இறுதியில் உள்ள மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் ஆகிய நான்கு இயல்கட்கு மட்டும் பேராசிரியர் உரையும் உள்ளன. மாதவச் சிவஞான யோகிகள் சிறப்புப் பரயிரத்துக்கும் முதல் நூற்பாவுக்கும் மட்டும் அரிய விரிவுரை எழுதியுள்ளார். இக்காலத்தில் தமிழ்த்திரு. மறைமலையடிகளார், பேராசிரியர் கா. சுப்பிரமணியனார், நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் முதலிய பலரும் விளக்கமும் உரையுமாக பல அரிய நூல்களை ஆக்கியுள்ளனர்.

மேற்கூறிய யாவும் பரவை (கடல்) போல் பரந்து விரிந்து கிடத்தலானும், அவற்றை எல்லாருங் கற்றுத் தெளிந்து முடிவு காண்பதற்கு ஆரவாரம் மிக்க இக்கால வாழக்கையில் அமைதி இல்லாமையானும், இக்கால சிலர் வெளியிடும் வினா, விடைகள், உரைகள், யாவும் தேர்வில் மதிப்பெண் பெறுவிக்கும் நோக்கமே கொண்டு எழுதப்பெற்று மாணாக்கர் நூலாசிரியன் கருத்தையும் வழிகாட்டிகளான உரைகாரர்கள் போக்கையும் முழுமையாக உணரவொட்டாது அடிமைப் படுத்துவனவாய் இருத்தலானும், வளர்ந்து வரும் மொழிமரபுக்கேற்பத் தொல்காப்பிய வளத்தை விளக்கி வெளி

யிடுதல் இன்றியமையாததாகும் என்று பலரும் வேண்டினமையா னும் இத் 'தொல்காப்பிய வளம்' தொடராக வெளியிடப் பெறு-கின்றது.

இத்தொடரில் நூற்பாவின் நோக்கம், பொழிப்பு, குறிப்பு என்னும் முக்கூறே அமைந்துள்ளன. தேவையானவற்றுக்குத் தக்க எடுத்துக் காட்டுகளும் தரப்பட்டுள்ளன. விரிவான விளக்கங் களும் தடை விடைகளும் இங்கு இடம் பெறவில்லை. அவை பேருரை யில் இடம் பெறும்.

சிறப்புப் பாயிரம்

ஒரு நூலைக் கற்கப் புகுவோருக்கு அந்நூலை இயற்றிய ஆசிரியன் பெயரும், அதனுல் விளக்கப் பெறும் பொருளும், கற்றால் கிட்டும் பயனும், இன்னோரன்ன பிறவும் தெரிந்தாலன்றிக் கற்ப தற்கு மன எழுச்சி உண்டாகாது; தடுமாற்றமும் தளர்ச்சியும் உண்டாகும். ஆதலின் ஆசிரியன் பெயர் முதலியவற்றை உள்-ளடக்கிய சிறப்புப்பாயிரம் நூன்முகத்து அமைக்கப் பெறும். பின் வரும் தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம் ஆசிரியர் தொல்காப் பியருக்கு ஒருசாலை மாணுக்கர் (Class Mate) ஆகிய ஆசிரியர் பனம்பாரனாரால் இயற்றப்பெற்றதாக வழங்கி வருகின்றது.

வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூற் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்
நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்(து)
அறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட் டாசாற் கரிறபத் தெரிந்து
மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த
தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே.

பொழிப்பு: வடதிசைக்கண் வேங்கடமலையும் தென்றிசைக் கண் குமரியாறும் எல்லையாகவுடைய அவ்விடமாகிய, தமிழ்மொழி வழங்குதலான் நன்மை வாய்ந்த பெருநிலப்பரப்பின்கண் நடை பெறும் உலகவழக்கும் செய்யுள் வழக்கும் என்னும் இவற்றை ஆராய்ந்த பெருங் கரணியத்தான், எழுத்திலக்கணமும் சொல்லிலக் கணமும் பொருளிலக்கணமும் ஆகியவற்றை ஆராய்ந்து செந் தமிழின் உண்மையைப் பொருந்தி உணரும் பொருட்டுச் செந்தமிழ் நிலத்தில் முன்னர்த் தோன்றிய இலக்கணத்தையும் நுனித்தறிந்து பண்டையவற்றையும் தான் கண்டனவற்றையும் முறைமைப் படுத்தியமைக்கக் கருதித் தொல்காப்பியம் என்னும் இலக்கணத்தைத் தொகுத்துச் செய்தான், (அவன் யாவனெனின்) அங்ஙனஞ் செய்த குற்றமற்ற நூலினை மாற்றார் நிலத்தைத் தனக்கு நல்கும் போர்த் திரு வாய்ந்த பாண்டியன் (மாகீர்த்தியின்) அவைக்களத்தின் கண் அறமே பயிலும் நாவின்கண் தமிழ் மறைகள் நான்கனையும் முற் றப்பயின்ற அதங்கோட்டாசிரியர்க்குக் குற்றமறத் தெரிவித்து, பிறழாத மரபினையுடைய இயற்றமிழிலக்கணத்தை முறையாக உலகுக்கு அறிவித்தமையால், நீர் சூழ்ந்த பேருலகில் ஐந்திரத்தினை யுணர்ந்த தொல்காப்பியன் எனத் தன் பெயரைத் தோற்றுவித்துப் பல வகையான புகழையும் நிலைபெறச் செய்த தவ ஒழுக்கத்தினை யுடையான் (தொல்காப்பியன்).

[தான் வழக்குஞ் செய்யுளும் ஆய்ந்துணர்ந்தமையான் உலக மும் தமிழின் இயல்பையறிந்து வழங்குதற் பொருட்டு இத்தொல் காப்பியத்தைத் தொகுத்தியற்றினான். அவன் யாவன் எனின் நூலைப் பாண்டியன் அவையில் அதங்கோட்டாசாற்குத் தெரிவித்து உலகுக்கும் அறிவித்தமையால் தன் பெயரைச் செய்த தொல் காப் பியன் என்பது]

குறிப்பு: தென்குமரி என்பது இப்போதுள்ள குமரி முனை யன்று; அது குமரிக் கண்டத்தில் இருந்ததோர் ஆறுகும். கிழக் கும் மேற்கும் கடலே எல்லையாய் அமைந்தமையின் கூறாது விட் டார். இருக்கு முதலிய ஆரியச் சிறுதெய்வப் பூசாரிப் பாட்டுத் தொகுதிகள் தொல்காப்பியத்திற்கு மிகப் பிந்திய வாகலின் நான் மறை என்றது முன்னைத் தமிழ் நான்மறைகளேயாம்; நச்சினார்க்

[16-ஆம் பக்கம் பார்க்க]

அழகப்பர் தமிழ் மன்றம்

[அழகப்பர் கல்லூரிகள் வட்டம்]

காரைக்குடி-3

தமிழ் மன்றப் போட்டிகள்

பயில்கின்ற இருபாலீர் ! பைந்தமிழ்ப் பற்றுடையீர் !!

வணக்கம். கார்முகிற் கொடை வள்ளல் அழகப்பரின் ஐம்பெருங் கல்லூரிகளும் ஒருங்கிணைந்து தமிழ் நலம் பேணி நடாத்தி வரும் **"அழகப்பர் கல்வி மன்றம்"** *பதினான்கு ஆண்டுகளாகச் செயலாற்றி வருகின்றது. கடந்த ஆண்டுகளைப் போலவே இவ்வாண்டும்* **யாப்பு, கட்டுரை, சிறுகதை, பேச்சாற்றல் இவற்றை வளர்க்கும் நோக்கில்** *போட்டிகள் நடத்த முனைந்துள்ளோம். தமிழகக் கல்லூரிகளிற் கற்கும் இருபாலரும் போட்டிகளிற் கலந்து, மன்றம் எடுக்கும் தமிழ்ப் பணியைப் போற்றிப் புரக்குமாறு வேண்டுகின்றனம்.*

புரவலர்:

திருவாட்டி உமையாள் இராமநாதன்

சாமுவேல்ராசு,
தலைவர், முதல்வர்,
அழகப்பா கலைக் கல்லூரி.

கோ. திருநாவுக்கரசு, (க.இ.)
செயலர்,
கலைக்கல்லூரி

மா. கண்ணப்பன், *க.மு.ப.இ.*
துணைத் தலைவர்.

நகைமுகன், *(பொறி.இ.)*
இணைச் செயலர்,
பொறியியற் கல்லூரி.

அ. செல்லமுத்து *(அறி.இ)*
பொருளாளர், கலைக்கல்லூரி.

போட்டிக்குரிய தலைப்புகள்:

I யாப்புப் போட்டி:

1) **தமிழின் இனிமை**
2) **மாலைப் பொழுது**
3) **என்று விடியும்?**

(பாவலர் திரு கண்ணதாசன் அவர்களின் அன்னையார் விசாலாட்சி ஆச்சி அவர்கள் நினைவாக அளித்துள்ள ஐந்நூற்றைம்பது உருபா மதிப்புள்ள வெள்ளி உருள்கலன் வழங்கப்பெறும்)

2 கட்டுரைப் போட்டி: [திறனாய்வுக் கட்டுரைகள்]

1) அண்ணாவின் தமிழினப் பற்று
2) பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் பாத்திறன்
3) பாவாணர் பைந்தமிழ் ஞாயிறு

[திருப்பெருந்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள், திருமிகு பா. சீவானந்தம் அவர்களின் நினைவாக அளித்துள்ள உருபா ஐந்நூறு பெறுமான வெள்ளி உருள்கலன் வழங்கப் பெறும்]

3 சிறு கதைப் போட்டி:

1] தாய் மனம்
2] மனிதக் கழுகுகள்
3] கடற்கரைக் காற்று

(திருமிகு ஏ. சு. [இராசகோபாலன்]செல்வனேந்தல் அவர்களின் தந்தையார் நெற்குப்பம் திருமிகு ஏ. சுந்தரராசன் அவர்கள் நினைவாய் அளித்துள்ள ஐந்நூறுஉருபாமதிப்புள்ள உருள்கலன் வழங்கப்பெறும்)

போட்டி ஒழுங்குகள்:

1 எழுத்தோவியங்கள் நூற்றுக்கு நூறு விழுக்காடு தனித் தமிழில் அமைதல் வேண்டும். தனித் தமிழில் அமையா எழுத்தோவியங்-கள் ஏற்றுக் கொள்ளப் பெறா.

2 தமிழகக் கல்லூரிகளிற் பயிலும் இருபாலரும் கலந்து கொள்ளலாம்.

3 போட்டித் தலைப்புகளில் எவையேனும் ஒன்றினைப் பற்றி முழு வெள்ளைத் தாளில் ஒரு புறம் மட்டுமே எழுதப்பெறல் வேண்டும்.

4 பாக்கள் யாப்பமைதி குன்றாது பதினைந்து பாக்களாகவோ, அறுபது அடிகளாகவோ அமைதல் வேண்டும்.

5 கட்டுரை, சிறுகதை இவ்விரண்டும் முழு வெள்ளைத் தாளில் ஐந்து பக்கங்களுக்குக் குறையாமலும், எட்டுப் பக்கங்களுக்கு மிகாமலும் எழுதுதல் வேண்டும்.

6 தனித்தாளில் மாணவரின் கல்லூரி முகவரியும்,இல்ல முகவரியும் குறிப்பிடுவதோடு தம் எழுத்தோவியங்களுக்குச் சான்றாகக் கல்லூரி முதல்வர் அன்றித் தமிழ்ப் பேராசிரியர் கையொப்பம் வாங்கி அனுப்புதல் வேண்டும்.

7 கருத்துப் படைப்புகளை அனுப்ப இறுதி நாள்: 20—1—72
அனுப்ப வேண்டிய முகவரி:
கோ. திருநாவுக்கரசு, செயலர், அழகப்பர் தமிழ்மன்றம்,
காரைக்குடி-3.

8 ஒவ்வொரு போட்டிக்கும் நுழைவுக் கட்டணம் பண விடை வழி உருபா ஒன்று (உரு: 1) செயலர் முகவரிக்கே அனுப்புதல் வேண்டும்.

9 ஒவ்வொரு போட்டிக்கும் மும் மூன்று பரிசுகள் உள. முதற் பரிசு பெறும் மாணக்கர் பயிலும் கல்லூரிக்கு உருள்கலன் வழங்கப் பெறும்.

10 பரிசு பெறுவோர் நேரிலே வந்து பரிசுகளைப் பெறுதல் வேண்டும். இல்லையேல் பரிசுகளை அனுப்ப உரிய அஞ்சல் தொகை அனுப்புதல் வேண்டும்.

11 போட்டி முடிவுகள் நாளேடுகளில் வெளியிடப்பெறும். பரிசுப் படைப்புகள் மன்றச் சிறப்பு மலரில் பதிப்பிக்கப்பெறும்.

12 வெற்றி பெறும் மாணக்கர் அனைவரும் அவர்தம் கல்லூரி முதல்வரின் உரிமைச் சீட்டுப் பெற்று வருதல் வேண்டும்.

13 உருள்கலன்களை அவ்வக்கல்லூரி முதல்வர்கள் 30—11—72 ஆம் நாளுக்குள் செயலர், அழகப்பர் தமிழ் மன்றம். காரைக்குடி-3 என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

14 சொற்போட்டிக்கும் உருள்கலன் உண்டு. அதுபற்றிப் பின்னர் அறிவிக்கப் பெறும்.

15 போட்டிக்கு வந்தன மன்றத்திற்கே உரிமையுடையன.

15 மன்ற முடிவே இறுதி முடிவாகும். 0

[13-ஆம் பக்கத் தொடர்ச்சி]

கினியரும் இங்ஙனமே கூறினர். நூல் என்பது பண்டு இலக்கணம் ஒன்றையே குறிக்கும். அஃது இக்காலத்தில் பொதுப் பெயராய் மருவி வழங்குகின்றது. எழுத்து – இயற்றமிழிலக்கணம். அதங்கோடு- சேரநாட்டகத்துள்ள ஓர் ஊர். (இற்றைத் திருவிதங்கோடு (திருவிதாங்கோடு) ஆக இருக்கலாம் என்பர்.) அதங்கோட்டாசான் என்பதை மதுரைக் கணக்காயர் என்பது போலக் கொள்க! ‘ஐந்திரம் நிறைந்த’ என்பது தொல்காப்பியனுக்கு அடைமொழியளவாய் நின்றது. 0

மேகலை

ம: 125 'பொய்ம்மைப் புனிதர்கள்'

"அறிவியல் கருத்துகள் அனைத்தும் ஒருங்கே நிரம்பப் பெற்ற உலகப் பொது மொழியாம் ஆங்கிலத்தைப் 'பயிற்சி மொழி' என்ற தகுதியில் இருந்து இறக்குவது தற்கொலைக்குச் சமம்" — இந்தக் கருத்து தற்போது தமிழ்நாடு எங்கும் மிக வேகமாகப் பேசப்படுகின்றது; எழுதப்படுகின்றது. தமிழரின் அறிவை மாற்று மளவிற்கு ஆற்றல் வாய்ந்த நிலையில் விலையாகும் தாளிகைகள் ஒருங்கிணைந்து மேலுள்ள கருத்தினை ஊளை இடுகின்றன. 'உலகப் பொது மொழி'- இத்தொடரினைத் தனக்கே உரியதாக்கிக் கொள்ளும் தகுதி ஒரு மொழிக்கு உண்டாகி விட்டால், அல்லது அத்தகுதி உண்மையிலேயே ஒரு மொழிக்கு இருப்பின், அம்மொழியினை அறிந்த ஒருவன், ஆப்பிரிக்க நாட்டின் நீக்ரோவோடும், செஞ்சீனத்துத் தோழனோடும், உருசியத்து உடன் பிறப்போடும், செருமானியச் செம்மல்களோடும் ,பிரஞ்சு நாட்டிலே பிறந்தவனோடும் தனது எண்ணங்களைத் தங்கு தடையின்றிப் பரிமாறிக் கொள்ள அப் பொதுமொழி (கருவியாகப்) பயன்படுதல் வேண்டும். ஆயின் உண்மை நிலை என்ன? செர்மானியிலே, உலகத்தின் எந்தக் கோடியில் இருந்தாவது ஒருவன் செர்மனிக்குச் சென்று கல்வி பயில விரும்பின், அவன் ஆங்கிலேயனாகவே இருப்பினும், அவன் செர்மானிய மொழியில் தேர்வு பெற்ற பின்பே அவர்கள் நாட்டில் கல்வி பயிலுவதற்கு உரிய தகுதியை அவனுக்களிக்கின்றனர்.

அதற்கான பண்பாட்டியல் கழகங்களைச் செர்மானியர் உலகெங்கும் நிறுவியுள்ளனர். பிரஞ்சு நாட்டின் நிலையும் அதுவே. சீனத்தவர்கள் ஆங்கில வாடையையே தங்கள் எல்லைக்குள் வரவிடுவது இல்லை. உருசிய நாட்டினைப் பற்றிச் சொல்லத் தேவையே இல்லை. சப்பானியனும் தன் மொழி வாயிலாகவே அறிவைப் பெறுகின்றான். ஆகவே ஆங்கிலம் உலகப் பொதுமொழி என்ற கூற்று கலப்படமற்ற 'பொய்' என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாய் விளங்கு

கின்றது. 'ஆங்கிலத்தில் அறிவியற் கருத்துகள், சொற்கள் முதலி யன நிரம்பி உள்ளன'– என்பது மற்றொரு முழக்கம்' உண்மை, ஆங்கிலத்திலும் அறிவியற் கருத்துகள் நிரம்பித்தான் உள்ளன. ஆனால் அவை ஆங்கிலத்திலேயே பிறந்தவை அல்ல. அம் மொழிக்குக் கொண்டு வரப்பட்டவை. அவ்வறிவியற் சொற்கள் ஆங் கிலத்தில் மட்டுமில்லை. செர்மானியத்திலும், சப்பான் மொழியி லும், உருசியத்திலும் ஏனைய பிற மொழிகளிலும் அதே அளவிற்கு நிரவி இருக்கத்தான் செய்கின்றன. அம்மொழிக்குரியவர்களும் தம் மொழிகள் வாயிலாகத்தான் அக்கருத்துகளைப் பரப்புகின்றனர். ஆகவே ஆங்கிலம் உலகத்தின் பெரும்பகுதியை அரசு ஆண்டவர்க ளின் பொதுமொழி என்ற அளவிற்கு உண்மையே தவிர, அஃது உலகப் பொதுமொழி என்பது 'நஞ்சு கலந்த பொய்' பொய்.

ஆங்கிலம் என்ற மொழி பிறப்பதற்கு முன்னாலேயே தமிழன் கிரேகத்திலும், எகிப்திலும் வணிகம் செய்ததற்கு வரலாற்றுச் சான்றுகள் உண்டு.

ஆனால் ஆங்கிலம் கற்ற இன்றையத் தமிழனோ அடுத்த ஊருக்குச் சென்று உழைத்துப் பிழைப்பது என்பது கூட சிக்கல் நிறைந்த, இயலாத ஒன்றாக இருக்கின்றது. தாளிகை வலுவால் ஆங்கிலத்தைத் தாங்கி நிற்பாருக்கு இவை எல்லாம் தெரியாத கருத்துகள் அல்ல. பின் ஏன் அவர்கள் அம் மொழியை நிலை நிறுத்த அத்தனைப் பாடுபடுகின்றனர். இதற்கு விடையை நாம் அறிய வேண்டுமானால் 'அவர்கள் யார்' என்பதை உணர வேண்டும். அவர்கள் நம்மோடு இருப்பவர்கள். விளை நிலத்திலே களை முளைப்ப தில்லையா? அது போல். நெல் விளையும் நிலத்திலே புல் உருவிக ளாய்ப் புகுந்திட்ட ''புல்லர்கள்' 'உலகத்து மொழிக்கெல்லாம் மூலம் சமசுக்கிருதம் தான்" எனப்புகன்று,செத்துவிட்ட தங்கள் மொழிக்குப் பெருமை தேடித்தரும் பெரியவர்கள். அந்தச் சமசுக்கிருதம் தன் திரு இழந்து கோவில் கருவறையில் மட்டுமே உலா வந்து கொண்டிருந்த நிலையும் மாறுவதைக் கண்டு மனம் ஒடிந்து புலம்பிக் கொண்டு இருப்பவர்கள். ஒரு காலத்தில் நம்மிலே ஒரு சாராரைத் தீண்டத் தகாதவர்களாகப் பறைஅறிவித்து அவர்கள் கோவிலில் நுழைவதைத் தடுத்தவர்கள். இன்று அதே கோவிலுக்குள் 'தமிழ்' நுழையக் கூடாது என்று தடை போட்டுக் கொண்டு இருப்பவர்கள்.

தமிழ் நண்பர்களே! சற்றே நின்று இவர்களை உற்றுப்பாருங்-கள். தலையில் குடுமி, இடையில் பஞ்சகச்சம், மார்பில் முப்புரி நூல், ஆம்...இவர்கள் தமிழர்களே அல்லர். தமிழ்நாட்டிலே வாழ வந்தவர்கள்.

வையம்போற்ற வாழந்தவர்களைப் பார்த்து, வாழ வந்த இந்த வந்தேறிகள் சொல்கின்றனர். 'உங்கள் மொழி கடவுளைப் போற்றவும் உதவாது; கல்லூரிக்குள் நுழையவும் கூடாது' என்று. நெருப்போடு விளையாடும் இந்த நெஞ்சழுத்தத்தை அவர்களுக்குத் தந்தது யார்? ஐயத்திற்கு இடமின்றி அத்தகு துணிவை அவர்களுக்கு நாம்தாம் ஈந்தோம்.

எதைச் சொன்னாலும் ஏற்றுக்கொள்ளும் நம் முட்டாள்தனமும் ஏனென்று கேட்காத ஏமாளித்தனமுந்தாம் ஆச்சாரியார்களுக்கும் அவரின் அடிவருடிகளுக்கும் அத்தகு துணிவை ஏற்படுத்தி விட்டிருக்கின்றது. இவர்கள் ஆங்கிலமே பயிற்சி மொழியாக இருக்கவேண்டும் என்பது ஏன் என்றால் இத்தனை நாட்கள் ஆங்கிலம் மொழியாக இருந்ததால் நன்மை அடைந்தவர்கள் இவர்களே! நூற்றுக்கு 99 விழுக்காடு நன்மை பெற்றவர்கள் அவர்கள்தாம். இன்று தமிழ் பயிற்சி மொழியாகி விட்ட நிலையில் அந்த ஊர்க் குருவிகளின் நிலைமை இக்கட்டாக இருக்கின்றது. போதாத குறைக்குக் கூண்டுக்குயில்களாய்இருந்த தமிழர்களும் அறிவு வானத்திலே தங்கள் அழகிய சிறகினை விரித்து விடுவரோ என்ற அச்சமும் அந்த அத்திம்பேர்களையும் அம்மாமிகளையும் பிடுங்கித்தின்னத் தொடங்கி உள்ளது.

ஓர் இனம் தன் நிலைகளை எண்ணத் தொடங்கி விட்டால் அதன் தளைகள் அறுந்து விடும். தமிழ் இனம் எண்ணத் தொடங்குமானால் இங்கே மூளுகின்ற புரட்சி என்னும் வேள்வித்தீயிலே பார்ப்பனரின் வேதக் குப்பைகள் எரியத் தொடங்கிவிடும். ஆம், தமிழகத்தின் தளைகள் அறுந்துவிடுக. அஃதாவது ஆரியரின் வாழ்வு அழிந்து விடும். இதை அவர்கள் தெளிவாக உணர்ந்து இருக்கின்றார்கள். அதனால்தான் அவர்கள் துடிக்கத் தொடங்கி விட்டனர்.

அறிவுலகின் கதவுகள் திறக்கப்பட்டு விட்டன. நரிகள் வாயிலில் நின்று கொண்டு நம்மை உள்ளே நுழைய விடாமல் ஊளை

இட்டுக் கொண்டு இருக்கின்றன. அவ் ஊளை ஓசையை உலகின் அரிய இசை என்று எண்ணி அருந்தமிழ் இனத்தின் அரிமாக்கள் மயங்கி நிற்கின்றன.

கழகத்தமிழ் நிலத்து வல்லரிமாக்களே! நாம் பொங்கி எழ வேண்டிய காலம் நெருங்கி விட்டது. அறிவென்ற விளக்கினைத் தெருவெங்கும் ஏற்றும் நேரம் நெருங்கி விட்டது. எண்ணுங்கள்! எண்ணுங்கள்!!

—முகிலன், பெங்களூர்-16.

ம: 126 அரசிதழில் பிழை நேரலாமா?

பெருமதிப்பிற்குரிய ஐயா,

தமிழ்த் தொண்டு செய்து தமிழ் காத்துவரும் தங்கள் கவனத்திற்கு:- தட்டிக் கேட்க ஆளில்லை என்று கருதித் தமிழ்க் கொலை நடக்கிறது. Draft Syllabus for Stds I-V publised as Supplement to part II. Section 3 of the T. N. Gazette dt. 3-11-71.Cost Rs. 0-40 பள்ளித் துணை ஆய்வாளர், மாவட்டக்கல்வி அலுவலர், மற்றும் உயர்நிலைப் பள்ளிகள் முதலிய இடங்களில் இந்த அரசிதழ் கிடைக்கலாம். இல்லையென்றால் Director' Statio--nary, & Printing, Mount Road, Madras-1.க்கு விலையைப் பணவிடை மூலம் (அஞ்சற் செலவிற்கும் சேர்த்து) அனுப்பிப் பெறலாம்.

அதில் dtictation என்பதற்குக் 'கேட்டெழுத்து' என்றும், transcription என்பதற்குப் 'பார்த்தெழுத்து' என்றும் ஆளப்பட்டிருக்கின்றன. கேட்டெழுத்து கேடு+எழுத்து கேடு தரும் எழுத்து என்று பொருள் தரும். அல்லது கேடான எழுத்து என்றுவது கொள்ளலாம்—இதுவும் வலிந்துதான் கொள்ளவேண்டியிருக்கிறது.

'பார்த்துஎழுத்து' தொடரே சரியில்லை. நான் கல்வித்துறையில் பணிசெய்பவன். தாங்களே தக்க முறையில் வெளிப்படுத்தி ஆவன செய்ய வேண்டுகிறேன். சில ஆண்டுகட்கு முன் ஆங்கிலப் பாடப் பொத்தகங்களிலுள்ள குறைகளைப் பற்றித் திரு. திருகூடசுந்தரம் அவர்கள் 'நூலகத்தில்' எழுதிக் கல்வித் துறையை ஒரு பெரும் கலக்குக்கலக்கினார். அதற்குள் அவர்களுக்கு மழுங்கிவிட்டது.

—ஒரு தமிழ்த்தொண்டர், ஆடுதுறை (தஞ்சை)

ம: 127 தமிழ்த்திருநாட்டின் விடுதலை என்றோ?

ஐயா, வணக்கம். வங்க தேயம் இன்று விடுதலை நாடாகி விட்டது. விடுதலை என்ற உரிமைப் பொருளுக்கு அது கொடுத்த விலை மிகுதி. உயிரினை உணர்வு நெருப்பிலிட்டும், உடலினை அரத்த வெள்ளத்தில் மூழ்கடித்தும், அஞ்சா நெஞ்சத்துடனும் அரிமா நோக்குடனும் வங்க மக்கள் போரிட்ட காட்சி சின்னாட்கு முன்பு நடந்த காட்சி மட்டுமன்று; அது தமிழகத்தில் நடக்கப் போகும் காட்சி கூட. ஆனால் வங்கமக்கள் வினைத்திறத்தைப் பாராட்டிவிட்டுத் தமிழரின் நிலையை நினைத்தால் பெரும் இழிவு! இங்குள்ள வீடணர்களையும் ஆரிய வருடிகளையும், கைக்கூலிகளையும், தொண்டமான்களையும் வங்க மக்கள் பெற்றிருக்க வில்லையே. தமிழ் மண்ணிலிருக்கும் ஐந்தாம் படையினரோ, உண்பது தமிழன் சோறு; உயிர்ப்பது தமிழகம்; உண்டு கொழுத்துத்திரிவது தமிழன் உழைப்பில்; ஆனால் வாய் கொழுத்துப் பேசித்திரிவது, எழுதுவது தமிழுக்காக; தமிழர்க்காக அன்று. இந்த நன்றிகெட்ட நரிகள் என்றொழியுமோ? என்னே தமிழகத்தின் தீயூழ்? இந்தச் சூழலில் தமிழகத்தின் விடுதலை, தலைகாட்டும் நாள் என்றோ?

தங்களன்புள்ள, சி. இராசாங்கம். தஞ்சாவூர்

ம. 128 தியாகராசர் திருவிழா!

முன்னர் திருவையாற்றில் தெருத்தெருவாக இரந்துண்டு வழி பாட்டுப் பாடல்களைப் பாடித்திரிந்த பண்டாரப் பாரப்பனர் தியாக ராசருக்கு 'ஆராதனை விழா' என்ற நிறங்கொடுத்து ஆண்டுதோறும் 50000 (ஐம்பதினாயிரம்) உருபாவைச் செலவிட்டுத் தின்றுகொழுத்துத் "தமிழ் நாட்டில் தமிழ்தானில்லை" யென்றவாறு, தமிழில் பாடாது தமிழகத்தை இழிவு படுத்தி ஆரிய மக்கள் வல்லாண்மை செலுத்தி வருகின்றனர். இதற்கெனப் பல்லாயிரக்கணக்கில் பொற்குவையை அறக்கட்டளையாக விட்டுச்சென்ற தமிழச்சி பெங்களூர் நாகரத்தினம்மாள் கல்லறைக்கு (தியாகராசர் கல்லறைக்கு எதிரில்உள்ளது) முன்பாக (சூத்திரச்சி என்று பெரும்பாலும் மறைத்து) மேடையைப் போட்டுத் தெலுங்குப் பாடல்களையே ஊளையிட்டுத் திரிகின்றனர். தமிழைத் தாழ்ந்த மொழி (நீசபாஷை) என்றொதுக்கி ஆண்டு

தோறும் பலர் (இன்றைய முதல்வர் கலைஞர் உட்பட) வேண்டுகோள் விடுத்தும் தமிழில் கட்டுப்பாடாகப் பாடாதொழிகின்றனர். இவ்வாண்டு சனவரி 3-4-5 ஆகிய நாட்களில் நடக்கவிருக்கும் இப்பார்ப்பன ஒப்பாரித் தெருக்கூத்திற்கு நடுவணரசு, மாநில அரசு, இந்திய வானொலி ஆகியவற்றிலிருந்து கலைக் கழக நல்கீட்டுத் தொகையாகப் (Sangitha Natak Acadamy) பல்லாயிரக்கணக்கில் பார்ப்பனர்களுக்கே பயன் படுகிறது. இவ்விழா நடக்கும் மூன்று நாளும் [இதற்கு முன்னர் பத்துநாட்கள்] மூன்றுவேளையும் இவ்வூர்ப் பார்ப்பனர் [பஞ்சாங்காரப் பார்ப்பனர் வீட்டிலிருந்து பதவிப்பட்டயம் கட்டிக்கொள்ளும் (Judge) பார்ப்பனர் வீடுவரை] அடுக்களையில் புகையே எழாது. இவ்வாண்டு நாட்டின் நெருக்கடி நிலையை முன்னிட்டாவது மாநில அரசும், நடுவணரசும் இவ்விழாவைத் தடை செய்ய வேண்டும். —இராவணன், இரணியன்,

பகுத்தறிவாளர் மன்றம், திருவையாறு.

மஃ 129 மகாராட்டிர முதல்வரைப் பாருங்கள்!

தென்மொழி சுவடி-9, ஓலை: 2-இல் வெளிவந்த 'வெட்கப்பட வேண்டும்நாம்' ஆசிரியவுரையைப்படித்தபோது சென்றஆண்டு பூனுவில் 23—8—70 இல் நடந்த நிகழ்ச்சி ஒன்று நினைவிற்கு வந்தது.

முன்னாள் பூனுப் பல்கலைக் கழகத் துணைக் கண்காணகர் சி. வி. போத்தர் Prof. D. V. Potdar மகாராட்டிர மன்னன் சிவாசியையும் அவன் அமைத்த அரசைக் குறித்தும் (Sivaji Maharaj) பெரும் வரலாற்று நூல் ஒன்று எழுதி வருகின்ருராம். இந்நூலை விரைவில் முடித்துத் தருமாறு அம்மாநிலத்திலுள்ள 81 கல்விக்கழகங்களும் பேராசிரியர் போத்தரின் 80-ஆவது பிறந்த நாள் விழாவைக் கொண்டாடின. அவ்விழாவுக்குத் தலைமை தாங்கிய மாநில முதல்வர் வி. பி. நாயக்கு அவர்கள் பேசிய பொழுது, மகாராட்டிர மக்கள் தங்கள் மாமன்னனின் வரலாற்று நூலை விரைவில் முடித்துத் தருமாறு பேராசிரியர் போத்தரை மிக ஆவலுடன் எதிர்பார்ப்பதாகக் கூறியும், அதனுல் அவ்வெழுச்சிமிக்க மறவனின் வரலாற்றை விரைவாகவும், முழுமையாகவும் எழுதி முடிக்குமாறு கேட்டுக்கொண்டும் அப்பேராசிரியர் ஆங்காங்கு சேர்த்து வைத்துள்ள [ஓர் இலக்கத்

திற்கும் மேற்பட்ட] வரலாற்றுக் குறிப்பேடுகளை (Historial records) ஓரிடத்திற்கு மாற்ற ஆகும் செலவிற்கு முதல்வரின் தொகையி(Chief Minister's fund)லிருந்து உருபா: 5000 அன்பளிப்பாகத் தந்தார்.

ஐயா, இச்செய்தியை அருள் செய்து தென்மொழியில் வெளியிடுங்கள்—தமிழக முதல்வரும், மக்களும் வெட்கப்படட்டும். ஒரு மன்னனின் வரலாற்று நூல் வெளிவருவதற்கே, அம்மாநில மக்களும் மாணவர்களும், முதல்வரும் ஒரு பேராசிரியர்க்கு இத்துணைச் சிறப்பும் ஊக்கமும், ஆக்கமும் கொடுக்கும் இதே காலத்தில், மொழிகள் குலமுதல்வியாம் முத்தமிழுக்கு இத்தனைக் காலமாய், எத்தமிழனும் செய்யவியலாத ஓர் ஒப்பற்ற பணியைச் – செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலி உருவாக்கும் ஈடு இணையற்ற மொழிப் பேரறிஞர் பாவாணரவர்களின் பெரு முயற்சியை –வாழ்நாள் உழைப்பைக் கண்டும் காணாத மக்களை மக்கள் எனலாமா? கேட்டும் கேளாத செவியினரான முதல்வர் மு. க· வை நம்மினப்பற்றுள்ள முதல்வர் எனச் சொல்லி எங்ஙனம் பெருமைப்படுவது? வெட்கந்தான் படவேண்டும்!

மேலும் தாங்கள் சுவடி:8 ஓலை: 11, 12, இல் எழுதியுள்ள ''நமை நாமே என்றென்றும் கெடுத்து வந்த கதையிதுதான்'' என்றும், ''பீடு சான்ற பாவாணர்களைப் பேணிக்கொள்ளத் தெரியாமல் முட்டுக்கல் போல் நின்று, முரண்டு பிடிக்கும் அரசும் அரசன்று; அறிஞரும் அறிஞரல்லர்'' என்றும் எழுதிய வரிகள் எத்துணை உண்மை.

—கணியன், சோதிப்புரி.

வெளி வந்து விட்டது!

தென்மொழி அன்பரும் புரக்குநருமான

பாவலர் முல்லைவாணன்

அவர்களின் பாடல் தொகுப்பு நூல்

" தமிழருவி "

விலை: 4-00 உருபா

மொழிஞாயிறு பாவாணர் அவர்களின் அணிந்துரையும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் மதிப்புரையும் நூலை அணி செய்கின்றன.

பதிவஞ்சலில் வேண்டுவோர் உருபா 5–25 விடுக்க.

விற்பனையாளர் 15% கழிவு நீக்கி 10 படிகட்கான முன் தொகையுடன் எழுதுக.

தென்மொழி, கடலூர்-1, தெ. ஆ.

'தென்மொழி'க்கு நன்கொடை.

27-5-70 முதல் 28-7-70 முடிய தென்மொழியின் வளர்ச்சியில் அக்கறையும் ஆர்வமும் கொண்ட அன்பர்கள் விடுத்த நன்கொடைப் பட்டியல் வருமாறு. ஒல்லும் வகையில் அறவினை ஓம்பும் அத் தமிழ் நெஞ்சங்கட்கு நம் நன்றியும் வாழ்த்தும் உரியவாகுக.

உருபா

திரு பொ. வீரபித்தன் அவர்கள் வழி சிங்கப்பூர் அன்பர்கள்:

திருவாளர்கள்: எம். தியாகராசன், கா. கைலாயம், கி. சிவசாமி, எசு. எம். அப்துல் வாகீது, ஆர். சுப்பிரமணியம், சுப. கருப்பையா, டி. எசு.சண்முகம், வி. அழகு, ஆர்.எசு. சண்முகம், பி. சிங்காரவேலு (உரு 3·41 மேனி) 34-10

திருவாளர்கள்: எசு. கருப்பையா, கே. கணபதி, மு. முத்துசாமி, மணிமேகலை கம்பே, ஏ. இராமசாமி, பொ. வீரபித்தன், பொ. மாயாண்டி (உரு: 34-15 மேனி) 239-05

திருவாளர்கள்: கே. கிருட்டிணசாமி, ஆர். வாமன், குஞ்சிராமன் (உரு: 17-08 மேனி) 51-24

திரு ஏ. எல். எசு. முத்தழகு 10-25

திரு கு. பிச்சை 6-83

திரு எம். தங்கக்கண்ணுச் செட்டி 6-83

திரு வி. நடேசப் பத்தர் 1-70

திரு எம். கே. கோவிந்தராசு, பெங்களூர்-3. 15-00

திரு க. நாராயணன், பெகும்பகல்லா 1-00

திரு பரமசிவம், நாகபுரி. 1-00

திரு இ. ஆர். பாண்டியன், நாகபுரி. 1-00

திரு ந. இராமசாமி, நாகரசம்பட்டி, தருமபுரி. 1-00

மறைமலையடிகள் மன்றம், பு. புளியம்பட்டி. 4-00

திரு சி. இராமச்சந்திரன், சிராப்பள்ளி. 50-00

திரு ஏ. பி. நரசிம்மன், பெங்களூர்-21. 10-00

(உண்டியல் குலுக்கித் திரட்டியது)

திரு துரை. சம்பத்குமார், ஈரோடு-1. 5-00

திரு து. க. இராமசாமி, ஈரோடு. 5-00

திரு ஏ. இரெக்சு, C/o 56. APO 1-00

மறைமலையடிகள் மன்றம், பு, புளியம்பட்டி. 3-00

பர். திரு. பொ. இளங்கோ, உக்கரம். 25-00

[தொடரும்]

கூட்டல்.

—உணர்வேந்தி.

மாந்தனின் அறிவு நாளுக்கு நாள் அகன்றும் ஆழ்ந்தும் வருகின்ற தென்ப. அவன் தன் வினைகளின் காலச் செலவையும் கடுமையையும் குறைக்க வல்ல வழிமுறைகளையும் கருவிகளையும் உருவாக்குவதிலும் கண்டுபிடித்தலிலும் முழு மூச்சாக இறங்கி யிருக்கின்றான். இவ் வகையில் உருவாகிய வழிமுறை ஒன்றினை இக் கட்டுரையின் மூலம் அறிந்து கொள்வோம்.

எண் கணிதம் என்றாலே பலருக்கு வெறுப்பு. நாம் பயன் படுத்தி வரும் கணக்கீட்டு முறையில் இருக்கும் குறைகளும் இவ் வெறுப்பிற்கான கரணியங்களுள் ஒன்று. அவ்வெறுப்பை அகற்றிச் சுவையூட்டக் கூடிய முறை ஒன்றினைத் திராக்டென்பர்க்கு (Trachtenberg) என்னும் பெயரிய கணித அறிஞர் உருவாக்கி இருக்கின்றார். அம்முறை அவர் பெயரால் 'திராக்டென்பெர்குவின் அடிப்படைக் கணக்கின் விரைவு முறை" என்றழைக்கப் படுகிறது. எத்தனை, எத்துணை அல்லல், தொல்லை, இடையூறுகட்கிடையில் இம் முறைக்கு அவர் உருக் கொடுத்தார் என்பதனை முன்னமே 'தென்மொழி' (சுவடி: 6, ஓலை: 12) இல் வெளியாகியுள்ள அவரின் வாழ்க்கை வரலாறு தெளிவாகத் தெரிவிக்கும். ஆகவே, இக் கட்டுரை யில், கூட்டற் கணக்குகட்கு அவரின் முறை எவ்வெவ்வாறு பயன் படும் என்பதைக் காண்போம்.

இத்த முறையை ஆங்கிலத்தில் தந்தவர்கள் ஆன் கட்லெர் (Ann Cutler) உருடால்ப் மெக்சேன் (Rudolph Mc Shane) என்னும் இருவர் ஆவர். நம் கட்டுரை அவர்தம் நூலின் நேரடி மொழிபெயர்ப் பாகாதெனினும் வேண்டியவிடத்து அதனைத் துணையாக்கொண்டதே என்பதறிக.

0, 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 என்னும் ஒரு ரு எண்களை 'எண்ணுருக்கள்' அல்லது, குழப்பம் நேராவிடத்து வெறுமனே உருக்கள் என்றும், இவற்றில் எவையேனும் இரண்டும் அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வற்றைக் கொண்டு உருவாக்கப்படும் எண் ணுருச் சேர்க்கைகளை 'எண்கள்' என்றும் அழைக்க. காட்டாக, 9417 என்பது 9, 4, 1, 7 என்னும் எண்ணுருக்களால் உருவாகிய ஓர் எண். இந்த 9417—இல், 7, ஒன்றிட எண் என்றும், 1, பத்திட

எண் என்றும், 4, நூற்றிட எண் என்றும், 9, ஆயிரத்திட எண் என்றும் பெயர் பெறும். இவ்வாறே, 4351263—இல், 3, ஒன்றிட எண்; 6, பத்திட எண்; 2, நூற்றிட எண்; 1, ஆயிரத்திட எண்; 5, பத்தாயிரத்திட எண்; 3, இலக்கத்திட எண்; 4, பத்திலக்கத்திட எண். இவ்வாறே பிறவற்றிற்கும் என்க.

9417 - இல் 9-ஐ இடக்கை எண் என்றும், 7-ஐ வலக்கை எண் என்னும் அழைக்க. பின்னர் (ஓர் எண்ணின்) ஏதேனும் ஓர் எண்ணுருவின் வலக்கைப் புறத்தில் அமைந்திருக்கும் எண்ணுருவை அதன் வலக்கை எண் என்றும், இடக்கைப் புறத்தில் அமைந்திருக்கும எண்ணுருவை அதன் இடக்கை எண் என்றும் அழைக்க. இங்கு 4—இன் வலக்கை, இடக்கை எண்கள் முறையே 1-உம், 9-உம் ஆம். இவ்வாறே பிறவற்றிற்கும் என்க.

ஓர் எடுத்துக் காட்டைக் கொண்டு புதுமுறையை அறிமுகம் செய்வோம். 7698; 6737; 1004; 9478; 8875; 3; 203; 94; 1567; 9846; 6401 —ஆகிய எண்களின் கூடுதல் என்ன? முதலில் இவ் வெண்களின் இனவெண்ணுருக்கள் ஒரே செங்குத்து வரிசையில் அமையுமாறு எழுதிக் கொள்ள வேண்டும். அதாவது ஒன்றிட எண்கள் ஒரே செங்குத்து வரிசையில் அமைய வேண்டும். இவ்வாறே பிறவிட எண்களும். எழுதிக் கொண்ட பின்னர் கீழ் எண்ணிற்குக் கீழ் படுக்கைக் கோடு ஒன்றினை இட்டுக் கொள்க.

7	6	9	8
6	7	3	7
1	0	0	4
9	4	7	8
8	8	7	5
			3
	2	0	3
		9	4
1	5	6	7
9	8	4	6
6	4	0	1

இங்கு நான்கு (செங்குத்து) வரிசைகள் இருப்பதைக் காணலாம். ஒன்றிட எண்களால் உருவாகும் வரிசையை ஒன்றிட வரிசை என்றும், பத்திட எண்களால் உருவாவதைப் பத்திட வரிசை என்றும், நூற்றிட எண்களால் உருவாவதை நூற்றிட வரிசை என்றும், ஆயிரத்திட எண்களால் உருவாவதை ஆயிரத்திட வரிசை என்றும் (இப்படியே பிறவற்றையும்) அழைக்க.

இக் கூட்டலை, நாம் பயன்படுத்திவரும் முறைப்படி செய்ய வேண்டுமெனில், கூட்டலை ஒன்றிட வரிசையில் தொடங்கி, ஆயிரத்திட வரிசையில் முடிக்க வேண்டும். அஃதாவது $8+7+4+\ldots\ldots$ எனக் கூட்டிச் செல்ல வேண்டும். நாம் விரும்பினுல், புதுமுறையிலும் இதனையே கைக்கொள்ளலாம். ஆனுல், இந்த வரிசையில் தொடங்கி இந்த வரிசையில்தான் முடிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. எந்த வரிசையில் வேண்டுமானுலும் தொடங்கி, எந்த வரிசையில் வேண்டுமானுலும் முடிக்கலாம். இப்படி ஒரே வரிசையிலுள்ள எண்களைக் கீழ்நோக்கிக் கூட்டி வருகையில், ஓர் எண்ணுடன் அதன் கீழிருக்கும் எண்ணைக் கூட்டிக் கொள்கிறோம் என்பது உண்மையே. இருப்பினும்,

'பதினொன்றிற்குமேல் ஒருபோதுங் கூட்டாதே'

என்ற திராக்டென் பெர்க்குவின் '11-நெறி'யைப் பயன்படுத்தியே கூட்டலைச் செய்கின்றோம். என்னை? கூட்டெண் 11-க்கு மிகுதியானுல், அவ் வெண்ணிலிருந்து 11-ஐக் கழித்து, வரும் மீதியுடன் கூட்டலைத் தொடர்கின்றோம். இவ்வாறு கழிக்கையில் எந்த எண்ணுருவைக் கூட்டினுல், கூட்டெண் 11-க்கும் மிகுதியாகின்றதோ, அந்த எண்ணுருவிற் கருகில் ' என்ற குறியை இட்டுக் கொள்க.

இப்பொழுது மேலுள்ள எடுத்துக் காட்டின் நூற்றிட வரிசையில் கூட்டலைத் தொடங்குவோம். அவ் வரிசை எண்களை மேலிருந்து கீழாகக் கீழ்க்காட்டுமாறு மனத்திற்குள்ளாகவே கூட்டுக.

6

7' $6+7=13$ இது 11-இனும் பெரிது. ஆதலின் இதிலிருந்து 11-ஐக் கழிக்க. ' குறியைக், காட்டியிருந்தற் போன்று, 7-க்கு அருகில்

இடுக. பின்னர், மீதியான 2-உடன் கூட்டலைத் தொடர்க.

0 $2+0=2$

4 $2+4=6$

8' $6+8\approx14$ இது 11-இனும் பெரிது. 11-ஐக் கழிக்க மிகும் 3-உடன் கூட்டலைத் தொடர்க ' குறியிட மறக்க வேண்டா.

2 $3+2=5$

5 $5+5=10$

8' $10+8=18$ 11-ஐக் கழிக்க ' குறியிடுக. 7-உடன் கூட்டலைத் தொடர்க.

4' $7+4\approx11$ 11-ஐக் கழிக்க. ' குறியிடுக. மீதி 0. இவ்வாறு இறுதியாகும் எண். சுருக்கக் கூட்டெண் எனப்படும். இங்குச் சுருக்கக் கூட்டெண் 0 ஆகும். இந்த 0-ஐ அடிக் கோட்டிற்குக் கீழ் நூற்றிட எண் வரிசையில் எழுதுக. பின்னர் குறிகளை எண்ணுக இவ் வெண்ணிக்கை குறிஎண் எனப்படும். இங்குக் குறிஎண் 4. இந்தக் குறியெண்ணையும் நூற்றிட வரிசையில் (0—க்குக் கீழ்) எழுதுக. இவ்வாறே ஒவ்வொரு வரிசைக்கும் அதன் சுருக்கக் கூட்டெண்ணையும் குறியெண்ணையும் கண்டு எழுதிக் கொள்க. இப்பொழுது கணக்கு பின்வருமாறு தோற்றமளிக்கும்:

7	6	9	8
6'	7'	3'	7'
1	0	0	4
9'	4	7	8'
8	8'	7'	5
			3'
	2	0	3
		9'	4
1	5	6	7'
9'	8'	4'	6'
6'	4'	0	1

சுருக்கக் கூடுதல்:	3	0	1	1
குறிக் கூடுதல்:	4	4	4	5

குறிக் கூடுதலுக்குக் கீழே படுக்கைக் கோடு ஒன்று வரைந்து கொள்க. பின்னர், இவ் விரண்டு கூடுதல்களையும் பின்வருமாறு கூட்டக் கணக்கின் விடை கிடைக்கும்.

இந்தக் கூட்டல் ஒன்றிட வரிசையில் தொடங்கப்பட வேண்டும். இங்குப் பயன்படுத்தும் கூட்டன் முறை 'ட' வடிவத்தது. அஃதாவது, ஏதேனும் ஒரு வரிசையின் சுருக்கக் கூட்டெண்ணுடன், அதே வரிசைக் குறியெண்ணையும், அக் குறியெண்ணின் வலக்கை(க் குறி)எண்ணையும் கூட்ட வேண்டும். அஃதாவது:

--	—	1	—	
--	—	4	5	
		10		1+4+5.

இந்த 'ட' வடிவக் கூட்டலை ஒன்றிட வரிசையில் தொடங்குக.

சுருக்கக் கூடுதல்:	0	3	0	1	1	
குறிக் கூடுதல்:	0	4	4	4	5	
					6	1+5
				·0		1+4+5=10, இவ்வாறு கூடுதல் ஈருரு எண்ணாகின் இவ் வெண்ணின், ஒன்றிட எண்ணை மட்டும் எழுதுக. பின் பத்திட எண் எதுவோ அத்தனைப் புள்ளிகளை (ஈருரு) எண்ணின் இடத் தலைப் புறத்தில், காட்டியவாறு இடுக. பின்னர் இப் புள்ளிகளின் எண்ணிக்கையுடன் கூட்டலைத் தொடர்க.

	9	1+0+4+4
	·1	3+4+4
5		1+0+0+4

ஆகக் கூட்டலை ஒரே மூச்சில் செய்து முடித்தால், அது பின் வருமாறு தோன்றும்.

எடுத்துக் காட்டு:1.

	7	6	9	8
	6'	7'	3'	7'
	1	0	0	4
	9'	4	7	8'
	8	8'	7'	5
				3'
		2	0	3
			9'	4
	1	5	6	7'
	9'	8'	4'	6'
	6'	4'	0	1
சுருக்கக் கூடுதல்: 0	3	0	1	1
குறிக் கூடுதல்: 0	4	4	4	5
5	·1	9	·0	6

இங்கு, இறுதிநிலைச் செயல்களைச் சற்றுக் கவனிக்க. மேற் கணக்கில் எழுதியுள்ளவாறு, (சுருக்கக் கூடுதலில் ஒன்றும் குறிக் கூடுதலில் ஒன்றும் ஆக)இரண்டு சுன்னங்களை ஒரே வரிசையில் அமையுமாறு – எழுதிக்கொள்ளாவிடினும் – இருப்பதாய்க் கற்பித்துக் கொள்ள வேண்டும். குறிக் கூடுதலின் இடக்கை எண் (இங்கு 4) கூட்டப்படாமல் விடுபட்டிருப்பதை நினைவூட்டவே இவ்வாறு செய்ய வேண்டியிருக்கின்றது. நம் கூட்டல் வழக்கமானதாயின் இது தேவையில்லை. ஆனால், நாமோ 'ட' வடிவக் கூட்டல் முறையைக் கையாள்வதால் இது தேவையென்க. இறுதிப் படியில் இக் கூட்டலின் நிலை:

$$\begin{array}{lll} 0 & & \\ 0 & & 4 \\ \hline 5 & \cdot & 4+1 \end{array}$$

'ட' வடிவக் கூட்டல் முறை இம் முறையின் சிறப்புக் கூறுகும். இது எல்லாவிடங்களிலும் கையாளப்படும் என்பதறிக.

எளிய, குறுக்கு வழி:

கூட்டல் இன்னும் எளிதாக, 'குறுக்கு' வழி ஒன்றிருக்கின்றது. 11-விதியைப் பயன்படுத்திக் கூட்டுகையில், கூட்டெண் 19-ஐ ஒருபோதும் தாண்டியதில்லை என்பதைக் கவனித்திருக்கலாம். அஃதாவது, இக் கூட்டெண்களில் பத்திட எண் எப்போதும் 1-ஆகவே இருக்கும். ஆகவே, 11-ஐக் கழிக்க நேர்கையில், 11-ஐ உண்மையாகவே கழிக்க வேண்டிய தேவை இல்லை. கூட்டெண்ணில் பத்திட எண்ணை ஒதுக்கி விட்டு, ஒன்றிட எண்ணிலிருந்து 1-ஐக் கழித்தாலே போதும். அதாவது, கூட்டெண் 16—ஆகின், இதில் 1-ஐ ஒதுக்கி விட்டு, 6-ஐ மட்டுமே கருத்திற் கொண்டு, இந்த 6-இலிருந்து 1-ஐக் கழிக்க 5 வரும். இவ்வாறு 16, 5 ஆகின்றது. இங்கு ' குறி இட்டுக் கொள்கின்றோம். இச் செயல் புன்மையாகப் படலாம். ஆனால் அப்படியன்று. செயலில் ஈடுபடுகையில், எந்த வழியை நீங்கள் கருதிப் பார்க்கின்றீர்களோ அந்த வழி, செயலை இரு மடங்கு எளிமையாகவும் ஆக்கக் கூடும்; இரு மடங்கு கடினமாவும் ஆக்கக் கூடும்.

இன்னொரு சிறிய கணக்கையும் இங்குச் செய்து காட்டுவோம்.

எடுத்துக் காட்டு: 2.

$$\begin{array}{rl} & \cdot 98 \\ 4 & \cdot 01 \\ & \cdot 69 \\ & \cdot 34 \\ & \cdot 64 \\ \hline \end{array}$$

கூட்டெண் 11க்கும் மிகுதியாகையில், ' குறியிட்டுக்கொள்ளவேண்டும் என்பதையும், சுருக்கக் கூடுதலையும் குறிக்கூடுதலையும் 'ட' வடிவத்தில் கூட்ட வேண்டும் என்பதையும் மறக்காமல் கூட்டியிருப்பின் விடை

சரியாகவே இருக்கும். இதன் சரியான விடை 6-66 ஆகும். இன்னுங் குறிப்பாய்ச் சொல்ல வேண்டுமாயின் இக் கணக்கில்.

சுருக்கக் கூடுதல்	4 · 24
குறிக் கூடுதல்	0 · 22

'ட' வடிவக் கூட்டற்படி, இதன் கூடுதல் 6 · 66 ஆகும்.

இங்கு இன்னும் இரண்டு எடுத்துக் காட்டுகளையும், அவற்றின் பின் மூன்று பயிற்சிக் கணக்குகளையும் தருகிறோம்,

எ. கா. 3

	7	8	6	5
	4	9	7	9
	7	4	5	3
	4	2	1	3
	1	2	3	4
	8	7	6	5
	6	7	5	3
	9	4	3	4
சுருக்கக் கூடுதல்:	2	10	3	3
குறிகள்:	4	3	3	3
கூடுதல்:	5 ·0 ·6		9	6

எ. கா. 4

423 · 27
125 · 12
16 · 39
54 · 7
774 · 93
843 · 65
1 · 23
46 · 57
594 · 31
313 · 53
233 · 33
288· 0 · 17

பயிற்சி: 1	பயிற்சி: 2	பயிற்சி 3
2 1 3	19512	40304 · 27
3 9 8	40513	2042 · 32
2 4 7	2	102 · 34
2 3 6	34	1234 · 56
4 6 7	167	78965 · 43
2 1 3	2347	6543 · 21
6 3 9	12345	5678 · 91
9 6 3	———	23456 · 78
———		65432 · 87
		0 · 27
		———

இப் பயிற்சிக் கணக்குகளின் சுருக்கக் கூடுதல்களும், குறிக் கூடுதல்களும், 'ட' வடிவக் கூடுதலெண்களும் கீழே தரப்பட்டிருக்கின்றன. உங்கள் கூட்டுத்தொகைகளுடன் இவற்றை ஒத்துப் பார்த்துக் கொள்க.

(1)	(2)	(3)
802	62688	881 10 3 · 12
234	01112	123 2 3 · 44
———	———	———
3376	74920	2237 6 0 · 96

நீங்களே கணக்குகளை உருவாக்கிக் கொண்டு, இப் புதுமுறையில் அவற்றைக் கூட்டிக் கூட்டிப் பயில்க.

இக் கட்டுரை திராக்டென்பெர்க்குவின் கூட்டல் முறையைக் கற்றுக் கொடுத்தது. திராக்டென்பெர்க்கு, கூட்டலுக்கு மட்டும் முறையை உருவாக்கியதோடு அமையாமல், கூட்டலைச் சரிபார்த்தற்கும், இரட்டைச் சரிபார்த்தற்கும் கூட முறை கண்டிருக்கின்றார் அவற்றை அடுத்த 'தென்மொழி'யில் காணலாம். மேலும், திராக்டென்பெர்க்குவின் கூட்டன் முறையை ஒரு புடையொத்த இன்னொரு கூட்டன் முறையையும் காணலாம். 0

பொறுப்பு யாருடையது?

—தரங்கை—பன்னீர்ச்செல்வன்.

இந்நூற்றுண்டில் தமிழகமெங்கும் வெளிவந்தவாறுள்ள கதை, கட்டுரை, பாடல், புதினம் (Novel) போன்ற எண்ணிறந்த புத்திலக்கியங்களைக் கண்டு நமக்குப் பெருமையும் மகிழ்ச்சியும் ஏற்படுதலுண்டு. பொதுவாக, பிறநாட்டு இலக்கியப் படைப்பாளியர் (Authors of Literature)களுடன் உறழ்ந்து நோக்க உயர்வாகவும் இணையாகவும் கருதக்கூடிய வகையில் நம் நாட்டுப் புத்திலக்கியப் படைப்பாளியர் வைகலும் வளர்ந்துகொண்டிருக்கின்றனர். அவர்தம் சீரிய வளர்ச்சிக்கு ஏந்தாக, அச்சுக்கலையும் தாளிகைப் பணியும் தமிழகத்தில் தழைத்துள்ளன.

ஏதேனும் ஒருவகையான தமிழ்த்தாளிகையை விருப்புடன் படிக்கும் பழக்கமுடைய எவரும், தாம் விரும்பும் எதைவேண்டுமானாலும் எழுதித் தாளிகை வழி வெளியீட்டுத் தன்னையும் ஒரு புத்திலக்கியப் படைப்பாளியாக அறிமுகப்படுத்திக் கொள்ளலாம். இவ்வாறின்றியும், தான் எழுதும் எதையும் எத்தாளிகையும் வெளியிடவில்லை யெனினும், தான் ஓர் எழுத்தாளன் என்னும் பொது நிலையிலோ, ஒரு பாவலன் [கவிஞன்] ஒரு கதையாசிரியன் [கதாசிரியன்] போன்ற தனிநிலையிலோ, நம்பிக்கையுள்ள எவனும், தானே ஒரு தாளிகையைத் தொடங்கித் தனது படைப்புகளை வெளியிட்டு ஒரு புத்திலக்கியப் படைப்பாளியாகி[நவ சாகித்ய கர்த்தா]விடலாம்.

எம்முறையிலோ, எவர் வழியிலோ, புதிய புதிய படைப்புகள் இடையறுது வெளிவருதலைக் கண்டு, தமிழின மேம்பாட்டில் அக்கறையுள்ளவர்கள் என்பதால் நாம் பெரிதும் மகிழ்வுறுகின்றோம். ஆயின், துடிப்புடன் புதியன புனையும் இற்றைத் தமிழ் எழுத்தாளர். படிப்படியாக மிகச் செவ்விதாய் வளர்ந்துள்ள நம் தமிழ்மொழியின் அடிப்படை இலக்கண அறிவுகூட இன்றி எழுதிடமுனைவதால், நம் இலக்கியப் படைப்புத் திறன் [Creative ability of Literature] கரும்புள்ளி செம்புள்ளி எழுதிய பூசுணைக்காயுடன் காணப்படும் மிகு பெறுமானமுள்ள அழகிய மாளிகையாகவே தோற்றமளிக்கின்றது.

உவப்புறு எழில்பொதுளிய மாளிகையை நிவப்புறக் கட்டிக் கண்ணேறு படாமல் காப்பதாகக் கருதிப் பூசுணைக் காயொன்றை

முன்றிலில் கவினறத் தொங்கவிடும் அவ்வுரிமையாளனது அறியாமை வெளிப்பாட்டைப் போன்றே, எத்துணை உயர்ந்த கருத்துடைய இலக்கியத்தைப் படைத்தாலும், அடிப்படை மொழியறிவு அற்றோரால் எழுதப்படும் இலக்கியமும், அதனை வரவேற்று வளர்க்கும் தமிழ் மக்களின் அறியாமையையே வெளிப்படுத்தி, பிறமொழியாளரின் நகைப்புக்கிடமளிக்கும்.

இஃது இந்நாள் ''ஜனரஞ்சக சாகித்திய சிருஷ்டி கர்த்தா''க்கள் அறியாத புதிய செய்தியன்று. அச் சந்தைத் தமிழ் எழுத்தாளரே, "தமிழ் எழுத்தாளர்க்கு நம் இலக்கிய, இலக்கண அறிவு இன்றியமையாதது'' எனக்கூறி, தவற்றை வேறு யாரோ செய்து கொண்டிருப்பதாகப் போலி உருவகத்தைச் செய்யுமளவுக்குத் துணிவுடன் கருத்துரைப்பது கண்டு நாம் பெரிதும் வியப்புற வேண்டியுள்ளது

செம்மையாகத் தைக்கப்படாத, வகைவகையான ஆயத்த ஆடைகளை [Ready made dresses], வண்ண மின் விளக்கொளியில் மக்களை ஏமாற்றி விற்கும் நெறிகெட்ட சில அங்காடி வாணிகரையும் விஞ்சும் இக் கயமையை, இன்றைய புகழ்பெற்ற எழுத்தாளர்களே செய்கின்றுர்கள் என்பதறிந்து மிகவும் மனத் தளர்ச்சி ஏற்படுகின்றது. ஏனெனில், பிறரை [பிற எழுத்தாளர்களை] இலக்கிய, இலக்கண அறிவற்றவர்கள் எனக் குற்றம் சாற்றும் இவர்தம் படைப்புகளில் இருக்கும் இலக்கணப் பிழைகளுக்கு அளவேயில்லை.

''யார் யாரோ நூல்கள் எழுதுகின்றனர். கணக்கற்ற நூல்கள் வெளிவருகின்றன. பெரும்பான்மையான நூல்களில் பிழைகள் மலிந்திருக்கின்றன, இலக்கிய நயம் காணப்படுவதில்லை. இலக்கண வரம்பும் இருப்பதில்லை'' [நூலகம், செப்டெம்பர், 1971] என்று புகழ்வாய்ந்த மறுமலர்ச்சி இலக்கியப் படைப்பாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். இக்கூற்றை மிகவும் மதித்துப் போற்றுவோம்.

1929-ஆம் ஆண்டுமுதல் 'ஆனந்த விகடனை'த் தொடர்ந்து படித்துப் படைப்புத்திறன் பெற்றுள்ள அவ்வாசிரியரின் வரிகள் இழப்புக்கும் உழப்புக்கும் ஆளாகியேனும் தமிழைச் செவ்வையாய் வளர்த்திட உறுதிகொண்டுள்ள அன்பர்களுக்கு மனநிறைவூட்ட

வல்லவை. ஆனுல் அக்கூற்றினை வெளிப்படுத்தியவரே, "பரம்பரையாக தமிழறிவு", "ஆனந்தவிகடனை தொடர்ந்து" "இவைதான்' 'அதுமட்டுமல்ல", "ஒரு ஊரில்", "தமிழ்நாட்டில் மட்டுமல்ல" போன்ற தமிழிலக்கண நெறிபிறழ்ந்த தொடர்களை ஆண்டுள்ளார். [இவற்றில் உள்ள தவறுகளை விரிவஞ்சி ஈண்டு விளக்கவில்லை].

இவ்வாருன தவறுகளை மிகுதியாகத் தாமே செய்துகொண்டு, இளம் படைப்பாளியரை—பிற எழுத்தாளரைக் குறைகூறும் புகழ் பெற்ற புத்திலக்கிய வாணிகர்களால், "தமிழோசை" உலகமெல்லாம் பரவும் அழகை என்னென்றுரைப்பது? இத்தகையோர் படைப்புகளைப் பாராட்டி நம் தமிழ்நாட்டு அரசினர் முன்பு உருபா 500. என்றிருந்ததை, உருபா 2000. ஆக மிகுத்துப் பரிசளிக்கின்றனர்.

பரிசுக்குரிய பல்வேறு தகுதிகளில் இலக்கணம் பிறழா எழுத்தாற்றலே தலையாய இடம் பெறல் வேண்டும். இன்றேல், வளர்ப்பதற்குத் தாமே அதிகாரிபோல் பிதற்றிக் கொண்டு, தமிழைச் சிதைக்கும் நாடிலிப் பாம்புகளும், நம்மினக் கோடரிக் காம்புகளும், ஆற்றும் பணியின் விளைவு எவ்வாறமையும் என்பதைக் கூறத் தேவையில்லை. அரசு இதனைக் கருத்தில் கொள்ளுமாக. 0

தென்மொழி கடலூர்-1.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்:	9 உருபா.	10-50 உருபா	14 உருபா
அரையாண்டுக் கட்டணம்:	5 உருபா	6 உருபா.	7-50
தனியிதழ்:	75 காசு	90 காசு	10-10

ஓரிதழுக்கு ஓர் உருபா 50 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

தமிழ்ச்சிட்டு, கடலூர்-1.

(தனித்தமிழ்ச் சிறுவர் கலையிதழ்)

	உள்நாடு.	வெளிநாடு.	கொழும்பு.
ஆண்டுக்கட்டணம் உருபா	3-00	6-00	4-00
தனியிதழ் "	0-25	0-50	0-35

(அரையாண்டுக் கட்டணம் இல்லை)

நட்புணர்வு

—மெய்ம்மைப்பித்தன்

அன்புணர்வைத் தவிர ஒரு சிறு துளிப் பகைமையுணர்வுக்கும் என் உள்ளத்தில் இடமில்லை.
கடும் பகையாக என்னைக் கருதுபவர்களைக் கூட, மிக நெருக்கமாகப் பார்க்கின்றது என் உள்ளம்!
அவர்கள் ஏன் என்னைப் பகைத்தல் வேண்டும், அல்லது வெறுத்தல் வேண்டும் என்று எனக்கு இன்று வரை விளங்கவே இல்லை.

நான் யாருக்காகிலும் பகைவனாக இருக்கவேண்டும் என்பதாக ஒரு கட்டளையிருந்தால் என் மனைவிக்குத்தான் பகைவனாக—முதற் பகைவனாக இருந்திருக்க வேண்டும்.
என் வலிந்த உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியாமல் அவள் பட்ட துன்பத்திற்கு அளவேது?
வானத்திற்கும் கடலுக்கும் தாவும் என் எண்ணங்களுக் கிடையில் அவள் சமயலறைக்கும் படுக்கையறைக்கும் என் பொருட்டு ஓயாமல் நடையிட்டாள்.
குளுகுளு என்று என் உள்ளம் குளிர்ந்த நேரத்தில் ஓயாத பணிகளால் வெதுவெதுப்பாக இருந்தது அவள் உள்ளம்!
அவளிடம் நான் மிகக் கடுமையாக நடந்து கொண்ட நேரங்கள் மிகுதி!
ஆனால் அந்நேரங்களில் கூட விலை மதிப்பற்ற ஓர் இறையன்பு அவள் மேல் இழையோடிக் கொண்டிருக்கும்!
அவளை எனக்கு முற்றிலும் தகுதியற்றவள் என்று நினைத்துச் சில பொழுதுகளில் வருந்தியிருக்கின்றேன்!
மனத்திற்குள் அழுதிருக்கின்றேன்!
ஆனால் அப்பொழுதுகூட நான் அவளின் ஒரு சிறு பகுதியைக் கூட வெறுத்தவனல்லன்!

அவளைத் தவிர நான் வேறு எவரையும் இவ்வுலகில் மிகக் கடுமையாக கடிந்து கொண்டதாக எனக்கு நினைவே இல்லை.
ஆனால் அவளைவிட, பலரை, மிகப் பலரை நான் அன்பாக நடத்தி யிருப்பதாக எனக்கு நன்றாக நினைவிருக்கின்றது.
அவர்களில் சிலர் இக்கால் என்னை மிகவும் வெறுப்பதாக – உள்ளூர வெறுப்பதாகக் கேள்விப்படுகையில், எனக்கு வருத்தத்தைவிட வியப்பே மேலிடுகின்றது.

துன்பத்தில் நெருக்கியடித்துக் கொண்டு, மூச்சுப்பிடித்துக்கொண்டிருக்கும் என் மனைவிக்கு நான் காட்டும் பேரன்பு வேறு, அவர்களிடம் நான் காட்டும் பேரன்பு வேறு என்று என் மனத்துலே என்றும் எடையிட்டுக் காட்டியதில்லை.

என் தட்டிலிருந்து என் மனைவிக்கு உணவுப்பண்டங்கள் மாறுவதைப் போலவே என் நண்பர்களின் தட்டுகளுக்கும் உணவுப் பண்டங்கள் மாறியிருக்கின்றன.

எனக்கும் அவளுக்கும் படுக்கை ஒன்ருயிருந்ததைப் போலவே எனக்கும் அவர்களுக்கும் படுக்கை ஒன்ருயிருந்திருக்கின்றது.

அவளை அதட்டி, அவர்கள் முன்னிலையில் கடுமையாகக் கடிந்து கொண்டமைக்கு, என் மனைவி வருத்தப்பட்டபொழுது கூட, 'அவர்களினின்று நீ வேறுபட்டவளல்லள்! அவர்கள் நம் இன்ப துன்பங்கள் யாவற்றிலும் பங்கு கொண்டவர்களே' என்று விளக்கம்கூறி அமைதிப் படுத்தியிருக்கிறேன்.

அப்படியிருந்தும் என் 'நான்' அவர்களுக்குப் பிடிக்கவில்லை.

என்னின்றும் வெளிப்பட்ட ஒளியை அவர்கள் விரும்பினுர்கள்.

அ:து அவர்கள் இருளைப் போக்கிற்று!

ஆனுல் அவ்வொளியோடு வெளிப்பட்ட சூடு அவர்களுக்குப் பிடிக்கவில்லை.

அ:து அவர்களைச் சுட்டது; புண்ணுக்கியது; கண்ணீர் விடச்செய்தது!

சூடு வராத ஒளியை அவர்கள் தேடினர்!

ஒருவேளை நட்பு என்பதற்குச் சூடற்ற ஒளி என்பதாகப் பொருள் படுத்திக் கொண்டார்களோ தெரியவில்லை.

'கடுஞ்சொற்கள்' அவர்களை வேறுபடுத்தியது என்று சிலர் கூறக் கேட்டேன்.

'கடுஞ்சொற்களின்' இலக்கணம் அது; வேறுபடுத்தக் கூடியது.

ஆனுல் 'நட்பின்' இலக்கணம் என்ன? எத்தகைய வேறுபாட்டையும் மாற்றக் கூடியதாயிற்றே!

பிற இலக்கணங்களை இல்லாமல் செய்து—பொருளற்றுப் போகும்படி செய்து—தனக்கென்று ஒரு தனியிலக்கணத்தைப் படைத்துக் கொள்வது தானே நட்பு! அ:தாவது உறவுப்படுத்தப்படாத இரண்டு உயிர்களின் அன்பு!

'கடிஞ்சொற்கள்' இலக்கணத்திற்குள் 'நட்பு' இலக்கணம் கறைந்து போவதானுல் 'நட்பு" கெட்டிப் படாமல் இருந்திருக்க வேண்டும் என்று தான் என் உள்ளம் கருதுகின்றது.

'கடுஞ்சொற்கள்' என்மனைவியின் 'நட்பை'வெட்டிப் பிரிக்கவில்லையே ஏன்?

என்னின்று அவள் ஒளியை எதிர்பார்த்துப் பயன் பெற முன்னிற்கையில், சூட்டுக்கும் தன்னை அணிமைப்படுத்திக்கொண்டாள்.

என்னால் அவள் நன்மை பெற முன் நின்ற பொழுது, அவள் நன்மையினையும் எனக்குப் பகிர்ந்தளிக்க முன் வந்தாள்.

தன்னலமற்ற அவள் உள்ளத்தில் பாய்ந்த ஒளியை விட, அவளைக் கருக்கிய சூடே என்னிடம் மிகுந்திருந்தது.

இருப்பினும், அவள், அதனை என் உள்ளத்தினின்று பாயும் அன்பொளியின் பொருட்டும், உணர்வினின்று சிதறும் அறிவொளியின் பொருட்டும் தாங்கிக் கொண்டாள்!

அவள் மனைவியாக என் அருகில் இன்றும் இருக்கின்றாள்!

குழுகாயக் கட்டுக் கோப்புகளுக்காக அவள் என்னிடம் இணைந்திருக்கவில்லை! அவளுக்காக-எனக்காக-அவள் இருந்தாள்!

நான் மட்டும் அவளுக்குத்தேவை. அவள் மட்டும் எனக்குத் தேவை! எனவே அவள் இன்னும் என்னோடு இருக்கின்றாள்; இருக்க முடிகிறது.

ஆனால் ஒளியோடு உடன் வந்த சூட்டைத் தாங்கிக் கொள்ள வியலாதவர்கள்-நான் மட்டும் தேவையில்லாதவர்கள் – என்னின்று வேறுபட்டனர்...!

அவர்கள் என் புறத்தவர்களாக மாறி நிற்கின்றனர்!

'மனைவி' என்ற உரிமையால் தாங்கிக் கொள்ள அவளால் இயலும். நாங்கள் ஏன் அதைத் தாங்கல் வேண்டும்-என்று அவர்கள் கருதுவார்களானால்......

'நட்பு' என்ற உரிமைக்கு மட்டும் இலக்கணத்தை அவர்கள் தாம் எழுதல் வேண்டுமோ?

நட்புணர்வு என்பது என்ன?
வேறு வேறாக நிற்கும் உடல்களின் வேறுபடாத உள்ளங்கள் ?
பாகுபடுத்தப் பெற்ற இரண்டு உணர்வின் பொருந்திய முனைகள்!
மேலிடும் ஒன்றைப் பகிர்ந்தேற்றுக் கொள்ளும் இரண்டு!
சுருக்கமாகச் சொன்னால், இரண்டில் ஒன்று!
ஒன்றில் இரண்டன்று!

அந்த இரண்டில் ஒன்று மனைவியாகவுமிருக்கும்; நட்பாகவுமிருக்கும்!
வேறு எவராகவோ, எதுவாகவோ இருத்தல் முடியாது!
ஏனெனில் அவற்றிற்குத் தனித்தனி இலக்கணங்கள் உண்டு.

அன்னை, தந்தை, தம்பி, தங்கை, அக்காள், அண்ணன், அளியன்,
அளியை, ஆசிரியன், அரசன்-ஆகிய எவர்க்கும் இலக்கணங்கள்-
அவரவர் தன்மைகள் தனித்தனி!
நட்பின் இலக்கணம் தனி!
அதுவே இரண்டில் ஒன்று!
அஃதில்லாதவை நட்புக்குரியவை அல்ல!
அவை கூடுவதுமில்லை; பிரிவதுமில்லை.
வந்து கூடியவரும் அவரே! விட்டுப் பிரிந்தவரும் அவரே!
இருந்த இடத்தில் நான் அன்று போலவே இன்றும் இருக்கின்றேன்!
அவர்க்காக என் இமைகளை ஈரப்படுத்திக் கொள்கின்றேன்!
நெஞ்சாங் குலையைக் கசக்கிக் கொள்கின்றேன்!
அவர்கள் அன்று போல இன்றும் எனக்கு அன்பர்களே!
நண்பர்களல்லர்; பகைவர்களுமல்லர்! 0

உதவி தேவை !

பேரன்புடையீர், வணக்கம்!

காவி உடையோடு, வீடு வீடாக இரந்துண்டு கொண்டே, 1938-இல், தமிழ் நாட்டில், இந்தி எதிர்ப்பு இயக்கத்தைத் தோற்றுவித்து, அதனைக் கட்டாயப்பாடமாக்கிய அன்றைய முதலமைச்சர் திரு. ஆச்சாரியார் அவர்களால் ஒன்றரை ஆண்டுகள் சிறைவாழ்வு பெற்றுப் பல இன்னல்களுக்கு ஆளாகிய நான், இன்று, எனது 77-ஆவது ஆண்டில், உண்ண உணவுக்கும், உடுக்கத் துணிக்கும் வழியின்றி, நோய்வாய்ப்பட்டுக், கடனாளியாகி, எங்கும் நடமாட முடியாத நிலை பெற்று அல்லலுறுகின்றேன். ஆகையால்,இல்லாதவர்களுக்கும், இயலாதவர்களுக்கும், தமிழ்த்தொண்டு செய்தவர்களுக்கும் உதவும் பண்புபெற்ற மதிப்புவாய்ந்த தமிழ்நாடு அரசினுடையவும், பேரன்புமிக்க தமிழ்ப் பெருமக்களுடையவும் அன்பான உதவியை நாடி நிற்கின்றேன்.

இங்ஙனம். நன்றி மறவாத,

ஈழத்து அடிகள்.

56, அறிஞர் அண்ணா தெரு. காஞ்சிபுரம்-3

திரு ஈழத்து அடிகள் இன்றைய இளைஞர்களுக்குப் புதியவர். ஆனால் இன்றுள்ள முன்னணித் தலைவர்கள் அன்றைய இளைஞர்களாகப் பொதுவாழ்வில் அடியெடுத்து வைத்த பொழுது, அன்று இருந்த தமிழ்த்தலைவருள் ஒருவராக விளங்கியவர். இந்தியினின்று தமிழைக் காக்கப் பாடுபட்ட அவருக்குக் கை கொடுத்துக் காக்குமாறு தமிழன்பர்களை வேண்டிக் கொள்வதுடன் அவர் வேண்டுகோள் கிடைத்தவுடனேயே உருபா நூறு விடுத்துதவிய **புன்செய்ப் புளியம்பட்டி மறைமலையடிகள் மன்றத்தாரையும்** *மனமாரப் பாராட்டுகின்றோம்.* —**பெருஞ்சித்திரன்.**

சிறுகதை:

மாந்தனு அவன்...?

-சுப. வீரபாண்டியன்

(''இனப்பொருத்தம் பஞ்சாங்கம் எற்றுக்கு வேண்டும்?
மனப்பொருத்தம் அன்ருே மணம்''

என்பது தான் இக்கதையின் உயிர். இந்த உயிரைக் காக்க நான் படைத்த உடல்தான், 'மாந்தனு அவன்' என்னும் இச்சிறுகதை.)

''கண்டேன்-கண்டாள்; நின்றேன்-நின்ருள்; தொட்டேன்-துவண்டாள்,'' என்று தானே இன்றெல்லாம் காதலின் தொடக்கமே அமைகிறது. ஆனுல் காதலிக்கத் தொடங்கி இரண்டாண்டுகளில் வேந்தன் தொட்டதுமில்லை-வெண்ணிலா துவண்டதுமில்லை. திருமணத்திற்குப் பின்பே, தொடுவதும், கை படுவதும் முறை என்று எண்ணும் புதுமைக் காதலர்கள் அவர்கள்.

ஆறு மாதங்கட்கு முன்பு, ''அறிவியல் இளவல்'', பட்டம் பெற்ற வேந்தன், இப்போது, ஓர் அரசு அலுவலகத்தின் இளநிலை எழுத்தன். அவன் காதலி வெண்ணிலா, கலைக்கல்லூரியின் முதலாண்டு மாணவி; காதற் கல்லூரியில் இரண்டாமாண்டு மாணவி.

இவர்களின் காதலை, வேந்தனின் இனிய நண்பனுன இளவரசன் மட்டுமே அறிவான். வேந்தனும், இளவரசனும் உயிருக்குயிரான நண்பர்களெனினும், அவர்களுக்கிடையில், சிறிது கருத்து வேறுபாடு உண்டு. 'தீமை செய்தவனையும், மன்னித்து மறக்கும் மாணிக்க உள்ளத்தைப் பெறவேண்டும். இன்னு செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல் வேண்டும்', என்னும் கொள்கையுடைய குறள் வழி நடப்பவன் வேந்தன். 'முள்ளை முள்ளால் தான் எடுக்க வேண்டும். இன்னு செய்தாரை ஒறுத்தல், அவர் நாண நையப் புடைத்து விடல் வேண்டும்,' என்னும் புதுமைக் கருத்தைக் கொண்டவன் இளவரசன்.

வெண்ணிலாவின் தந்தை, எண்ணிலா ஏழைக் குடும்பங்களை வட்டி வாங்கி வாங்கியே குட்டிச் சுவராக்கியவர். மாற்ருரின் கண்ணீரைக் கண்டு மனம் மகிழும் அவருக்கு உள்ளே இருப்பது, உள்ளமோ, இரும்போ, கல்லோ எவருக்குத் தெரியும்?

ஒருநாள், வேந்தனும், வெண்ணிலாவும், தத்தம் இல்லங்களின் பெரியவர்களிடம், தங்களின் ஆசைக் கனவுகளைச் சொன்னார்கள். எதிர்பாரா வகையாக இருவர் இல்லங்களிலும், எத்தடையுமின்றி, காதல் எண்ணங்கள் ஏற்றுக் கொள்ளப் பெற்று விட்டன.

மகள் மீது கொண்டிருந்த மாருத பாசத்தினால், மணமகனைக் காணாமலேயே ஒப்புதல் அளித்து விட்ட மாசிலாமணி, முறைப்படி மணம் பேச மணமகன் இல்லத்திற்கு வந்தார். எல்லாம் இனிது முடிந்தன. இறுதியில், 'பிறப்புக் குறிப்புகளின் பொருத்தத்தினையும் பார்த்து விடலாமே,' என்றார். வேந்தன் வெறுப்படைந்தான். ஆனால், மாசிலாமணியும், வேந்தனின் பெற்றோரும், அவன் வெறுப்பையும், அவர்கள் பொறுப்பையும் உணர்ந்தார்களில்லை.

வேந்தனின் பிறப்புக்குறிப்பினை வாங்கிச் சென்ற, மாசிலாமணி, இரண்டு நாட்களுக்குப் பின் மீண்டும் வந்தார். 'பிறப்புக் குறிப்புகளும் பொருந்தி விட்டன; மண நாள் குறிக்க வேண்டியது தான்,' எனச் சொல்வாரென்று எதிர்பார்த்தார்கள். ஆனால் அவரோ, 'இவர்கள் இருவருக்கும் திருமணம் நடந்தால், சில நாட்களுக்குள், பெண் தாலியை இழந்து விடுவாள். அவள் தந்தைக்கும் கேடு வரும்,' என்று கணியன் சொல்வதாகவும், எனவே வேறு இடத்தில் பெண் பார்க்கும்படியும் கூறிச் சென்று விட்டார். பழைமையில் ஊறிப்போன வேந்தனின் பெற்றோரும், வேறுவழியின்றி, அவர் சொல்லுக் கியைந்தனர்.

பெற்றோரின் ஆறுதலும், அவன் விரும்பும் வரை, வேறு மணம் செய்விப்பதில்லை என்ற உறுதிமொழியும், அவன் உடலையும், உயிரையும் இன்னும் இணைத்து வைத்துக் கொண்டிருந்தன. ஆனால் இதனினும் இரங்கத்தக்க நிலையில் வெண்ணிலா இருந்தாள்.

நண்பனை, நான்கு நாட்களாகக் காணாத இளவரசன் அவன் இல்லம் வந்தான். வேந்தன் துயின்று கொண்டிருந்தமையால் அவன் பெற்றோர் மூலம் செய்தியறிந்து கொண்டான். அவள் தந்தை பிறப்புக்குறிப்பு பொருத்தமாக உள்ள ஒருவனுக்கு விரைவில் மணமுடித்து வைக்கப் போவதாக அறிந்தான்.

இந்த நிலையில், 'நண்பன் மணந்து கொள்ள இயலாத அழகியை, நாமாவது மணந்து கொண்டால் என்ன?' என்ற எண்ணம், இளவரசன் மனத்தில் தோன்றி விட்டது போலும்! எனவே அவன் இரு நாட்களுக்குப் பின்பு, வெண்ணிலாவின் தந்தை எங்கே பொருத்தம் பார்ப்பாரோ, அதே பார்ப்பனன் இல்லத்திற்குச் சென்று, தன் பிறப்புக் குறிப்பினைக் கொடுத்து, 'எப்படிப் பொருத்தம்?' என்று கேட்டான். இரண்டு மணி நேரத்திற்குப் பின்பு, "உங்களுக்கென்று அந்தப் பெண் பிறந்திருக்கின்றாள்," என்று அவன் சொன்னதும், இளவரசனுக்கு இன்பம் தாளவில்லை. மாசிலாமணியிடம் இதனைக் கூறும்படி சொன்னான். தான் போய் தன் இல்லத்தில் கூறினான். மணம் பேசப்பட்டது. மணமகளின் இசைவில்லாமலேயே மணநாளும் குறிக்கப்பெற்று, வேந்தனுக்கு அழைப்பும் அனுப்பப்பெற்றது.

எந்தக் கைகளைத் தனக்கே சொந்தமென்று எண்ணிக் கொண்டிருந்தானோ, அந்தக் கைகளை, அவள் மாற்றானோடு, ஊரறிய-உலகறியப் பின்னிப் பிணைத்துக் கொள்ளப் போவதையும், அந்த மாற்றான், தன் நண்பனாகவே அமையப் போவதையும் அறிந்தபோது, 'வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதுபோன்றிருந்தது வேந்தனுக்கு. ஒரு மடலை எடுத்து, அதில் இளவரசனுக்கு

"நண்பன் உருவில் வந்த நயவஞ்சகனுக்கு!

"அடுத்தவன் வாழ்வைக் கெடுத்தவன் ஒரு நாள் படுத்தபின் எழ மாட்டான்"

என்று மட்டும் எழுதிக் கையொப்பமிட்டு அஞ்சல் செய்தான். அவன் இதழ்கள், அவனையுமறியாமலேயே.

'அவன் மாந்தனில்லை; விலங்கு... விலங்கு...விலங்கு' என்று புலம்பிக் கொண்டிருந்தது. தன் எண்ணத்தைச் சிறிது மாற்றிக் கொண்டு, வெண்ணிலாவுக்கொரு மடல் வரைந்தான்.

அன்பு நிலாவிற்கு,

திருமண அழைப்பினைப் பெற்றேன். கண்ணே, உன் இழப்பினையுற்றேன். நம் மணத்தை வேண்டுமானால் தடுத்து விடலாம்; ஆனால் உன்னையே சுற்றிச்சுற்றி வருகின்ற என் மனத்தையுமா வெண்ணிலா, அவர்களால் தடுக்க முடியும்?. இத்திருமணம். உன் இசைவின்றியே

இறுதியாக்கப்பட்டிருக்கும் என்று நம்புகிறேன். நாளை இரவு நாம் வழக்கமாக வந்து போகும் இடத்திற்கு வந்துவிடு. நாம் இருவரும் கண்காணாத தொலைவிற்குச் சென்று பதிவுத் திருமணம் செய்து கொண்டு விடலாம். **'உடன் போக்கு'** என்பது தமிழினத்திற்குப் புதிய தும் அன்று-கொடியதும் அன்று. —உன் அன்பு**வேந்தன்**

முடிந்தது மடல். தொடர்ந்தன அவனை மீண்டும் துன்பத் தின் தொடர் அலைகள்.

அடுத்த நாள் மாலை. அழகிய பூஞ்சோலை. அவன் குறித்த வேளை தாண்டியும் அவள் வராமை கண்டு, துடித்தான் அந்தக் காளை. இனிமேல் அவள் வரமாட்டாள் என்ற நினைவோடு எழப் போன அவன் காதுகளில் 'அத்தான்' என்றழைத்த பெண்ணின் குரல் தேனாய் இனித்தது. குரல் வந்த திசையை நோக்கித் திரும்பிப் பார்த்தான். ஏமாற்றம்! ஏமாற்றம்! எதிர்பாரா ஏமாற்றம்!! அங்கே வேறு யாரோ, ஒரு கணவனும் மனைவியும் உரையாடிக் கொண்டே சென்றனர். நிலை மறந்து, தலை குனிந்து, வேந்தன்,வீடு நோக்கி விரைந்து நடந்தான்.

வெண்ணிலாவின் மணநாட் பொழுது விடிந்தது. வேந்த னின் நெடு நாள் விழைவு வீணே முடிந்தது. நேரம் நெருங்கிவிட் டது. தாலி மணமகன் கையிலே கொடுக்கப்பட்டு விட்டது. கட்டப் பட வேண்டியது தான் குறை. எங்கிருந்தோ, திடீரென்று, 'நிறுத் துங்கள், நிறுத்துங்கள்,'' என்ற குரல் திரைப்படமாயிருப்பின் கேட்டிருக்கும். ஆனால் உண்மை வாழ்வில் அவற்றிற்கெல்லாம் இடமேது? எனவே, இங்கே மணமகள் கழுத்தில் மங்கல நாண் ஏறிவிட்டது. 'இளவரசன் – வெண்ணிலா' திருமணம் 'இனிது' முடிந்தது.

மணமக்கள் முதலிரவிற்காகக் கூடினர். பழி வாங்கும் பட லத்தைத் தொடக்கினாள் வெண்ணிலா, 'ஊருக்குத் திருமணம் முடிந்து விட்டது. ஆனால் உறவுக்கு நான் ஆயத்தமில்லை' என்றாள் வெண்ணிலா. வியப்பு மேலிட்டது, இளவரசனுக்கு. அவன் கெஞ்சி னான்-அவள் மிஞ்சினாள். இறுதியில், அவள் அங்குப் பழம் நறுக்க வைத்திருந்த கத்தியை எடுத்தாள். 'என்னைக் கொல்லப்போகிறாயா'? என்று கேட்டான், இளவரசன். உறுதியோடு விடை சொன்னாள், வெண்ணிலா. ஒன்று என்னைப் பார்த்துக்கொண்டிருக்கலாம்,அல்லது

என் பிணத்தைத் தழுவிக் கொண்டிருக்கலாம். எதைச் செய்யப் போகிறீர்கள்?' நாளாக ஆக, நம் வழிக்கு வந்துவிடுவாள் என்ற எண்ணத்தில், இளவரசன் அவளை அவள் வழிக்கே விட்டுவிட்டான். தொலைவில், எங்கோ வானொலி, "நிலவைப் பார்த்து வானம் சொன்னது, என்னைத் தொடாதே" என்ற பாடலை இசைத்துக் கொண்டிருந்தது.

மறுநாள் மாலை வந்தது. நெருங்கிய உறவினர் தவிர மற்றையோர் விடைபெற்றுச் சென்றனர். சற்றுத் தொலைவில் தனக்காக ஒரு ஏவலாளன் பாலாற்றிக் கொண்டிருப்பதைக் கண்ட இளவரசன், வெண்ணிலாவை அழைத்து, "பால் குவளையை, நீ வாங்கி வரக்கூடாதா?, என்று கொஞ்சலாகக் கேட்டான். 'பாம்பிற்குப் பால வார்க்கும் பழக்கம் என்னிடமில்லை" என்றாள் வெண்ணிலா. அவன் விடுவதாக இல்லை. இறுதியில், வேண்டா வெறுப்பாகவோ, வேறெதன் பொருட்டோ, அவள் அதனை வாங்கி வரச் சென்றாள்.

இருவரும் பேசிக் கொண்ட சொற்கள், அந்த ஏவலாளனின் செவிகளில் அரை குறையாகக் கேட்டு விட்டன. புதுமணமக்கள், இவ்வாறு பேசிக்கொள்வது, அவனுக்கு வியப்பையும் திகைப்பையும் அளித்தன.

'பத்து மணித்துளிகட்குப் பிறகு' வெண்ணிலா அவன் கையில், பால் குவளையைக் கொண்டு வந்து கொடுத்தாள். அவன் சுவைத்துச் சுவைத்து அருந்தினான். அவள் முறைத்துப் பார்த்து விட்டுப் போய் விட்டாள்.

கால்மணிப் பொழுது கடந்தது. கதறத் தொடங்கினான், இளவரசன். 'நெஞ்செல்லாம் எரிகிறதே...... தலையெல்லாம் சுழல்கிறதே' என்று பலவாறு புலம்பினான், அவன். உறவினர்கள் ஒன்றும் புரியாத நிலையில், மருத்துவரை அழைத்து வந்தனர்.

மருத்துவர், மணமகன் நாடியைப் பார்த்தார். இளவரசன் இறந்து விட்ட செய்தியைக் கூற வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது. 'ஆண்டாண்டுக் காலம் அழுது புரண்டாலும், மாண்டார் வருவதில்லை' என்றாலும், அழாமல் இருக்க முடியுமா? எனவே, பலர் உண்மையாக அழுதார்கள். சிலர் ஊருக்காக அழுதார்கள்.

இளவரசன் இறந்த செய்தி, வேந்தன் உட்பட, உறவினர் அனைவர்க்கும் சொல்லி விடப்பட்டது. இதற்கிடையில், இளவரசன் உடலை ஆய்வு செய்த மருத்துவர், 'இஃது இயற்கையாக வந்த முடிவன்று; யாரோ வேண்டுமென்றே நஞ்சிட்டுக் கொன்றிருக்கிறார்கள்,' என்றவுடன் அங்கிருந்த பலர், ஒருவரையொருவர் அச்சத்தோடு பார்த்துக் கொண்டனர். நகர்க்காவலர்களை அழைத்து வர ஒருவர் அனுப்பப்பெற்றார். அவர்கள் வருமுன்னர். மருத்துவர் கேட்ட பல கேள்விகட்கு, மற்றவர்கள் சொன்ன விடையைக் கொண்டு, இறுதியாக அவன் அருந்திய பாலிலேயே, கொடிய நஞ்சு கலக்கப்பெற்றிருக்க வேண்டும், என்று ஐயம் கொண்டனர். எனவே, அந்தப் பாலினைக் கலந்த வேலைக்காரன் தேடப்பட்டான். 'வேலைக்காரன் ஏன் கொலை செய்யவேண்டும்?' என்ற சிலரின் கேள்வியைத் தொடர்ந்து, 'தான் விரும்பிய வெண்ணிலாவை அடைய முடியாத ஏமாற்றத்தால் வேலைக்காரனைப் பயன்படுத்தி, வேந்தனே இக்கொலையைச் செய்திருப்பானோ?', என்றும் பலர் எண்ணத் தொடங்கினர். மாசிலாமணிக்கும், அவர்கள் கூற்றில் நம்பிக்கை ஏற்பட்டது.

அப்போது, மற்ற உறவினர்கள் அழைத்து வரப்பெற்றனர். அந்த வேலைக்காரன் இழுத்து வரப் பெற்றான். அவன் என்ன சொல்லப் போகின்றானோ என்று அனைவரும் எதிர்பார்த்துக்கொண்டிருந்த போது, நகர்க் காவலர்கள் வந்துவிட்டனர். அவர்களுக்கென்றே காத்திருந்தவனைப் போல், வேந்தனும் வந்தான். தனக்குத் தெரிந்த உண்மையை எப்படிக் கூறுவது என்று தெரியாமல், வேலைக்காரன் தவித்துக் கொண்டிருந்தான்.

அப்போது—

வெண்ணிலா உள்ளேயிருந்து, உரக்கக் கத்திக் கொண்டே ஓடி வந்தாள். 'உண்மையை நான் சொல்கிறேன்,' என்று கூவியதும், அனைவரும், வியப்போடு பார்த்தனர். ஒரு மடலை ஓடி வந்த விரைவில், வேந்தனின் கைகளில் கொடுத்து விட்டு, வெண்ணிலா மயங்கி விழுந்தாள். வேந்தன் பரபரப்போடு அதனைப்பிரித்தான்.

'அன்புமிகு நண்பனுக்கு, இளவரசன் விடுக்கும் முடங்கல். என்னுடைய முடிவு கண்டு, எவரும் இரங்க வேண்டாம், இது நானே விரும்பி ஏற்றுக் கொண்டது. எனவே என் தற்கொலைக்கு நானே

முழுப் பொறுப்பாளி யாவேன். ஆனால், ஏன் இந்நிலைக்கு நான் வந்தேன் என்பதனை, என் கடமையென எண்ணி, உனக்கு இம்மடலில் எழுதியுள்ளேன். இதனை எழுதி, என் படுக்கை மீது வைத்து விட்டு நான் இறந்து விடுவேன். நல்வாய்ப்பிருக்குமானால், அஃது உன் கையில் கிடைக்கட்டும்.

உன் காதல் தோல்வியையும், அதற்குப் பிறப்புக் குறிப்புகளும், பழஞ்சாத்திரங்களும் துணை செய்ததையும், அறிந்த போது, என் உள்ளக் குமுறலுக்கு அளவேயில்லை. முள்ளை முள்ளால் எடுக்க- உங்களது தூய்மையான காதல் உள்ளங்களை "எப்படியும்" ஒன்று சேர்க்க—உறுதி பூண்டேன்.

எனவேதான் ஒரு பொம்மைத் திருமணத்திற்கு ஏற்பாடு செய்தேன். எனக்கும், வெண்ணிலாவிற்கும், அந்த வேடிக்கைத்திருமணம் நடைபெறா திருக்குமானால் இந்நேரம், வெண்ணிலா மாறனின் மனைவியாகியிருப்பாளே!. உள்ளத்தால்அண்ணனாகவும், வெளி உருவத்தால் கணவனாகவும், இரட்டைப் புனைவோடு பழகுதல் சற்றுக் கடினமாக இருந்ததெனினும், வெண்ணிலாவிற்கு என் மேல் இருந்த வெறுப்பும், சினமும் என் வேலையைப் பெரிதும் குறைத்தன. இப் பொம்மைத் திருமணத்தில் தவறில்லை என்றே நான் கருதினேன். தாலி கட்டுவது மட்டுமே திருமணமாகிவிட முடியுமா?"

இவ்வுண்மைகளை உங்களிருவரிடமும் சொல்லிவிடத் துடித்தேன். ஆனால், நீங்கள் என் முடிவை வரவேற்க மாட்டீர்கள் என்பதாலேயே முடி மறைத்தேன். இப்போது என் திட்டம் முழுதும் முடிந்து விட்டது. எனினும் ஒரு குறை. நான் இறக்கும் தறுவாயில், உங்களிருவர் உளத்திலும் ஒரு கொடியவனின் இடத்தைப் பெற்று விட்டேனே என்பதே அக் கவலை. என் வெற்றிக்கு முன்னர், இதுவும் ஒரு தூசுதான்.

'இந்த நாட்டில், தேவையற்ற சாதி, மதம், நாள், நேரம் போன்ற எல்லா மணப் பொருத்தங்களும் பார்க்கப்படும்; தேவையான மனப் பொருத்தத்தினைத் தவிர.' எங்கள் திருமணமும், எல்லா பொருத்தங்களுடனுந்தான் நடந்தேறியது. ஆனால் முடிவு என்ன ஆயிற்று? எனவே இனிமேலாவது, தங்கையின் தந்தை, இதுபோல் பழமையில் உழலாது, உங்களின் மணத்தை முடித்து வைப்பார் என்று நம்புகிறேன்.

மேலும், அனைவரும் அவளை, இனி ஒரு கைம்பெண் என்றே கூறுவர். 'ஆடவரின் காதலுக்கும் பெண்கள் கூட்டம், அடைகின்ற காதலுக்கும் மாற்றமுண்டு", என்றே அவர்கள் சொல்வர். "வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள், மணவாளன் இறந்தால் பின் மணந்தல் தீது,"என்பதே, இக்கொடிய குமுகாயத்தின் கொள்கையாகும். 'பாடாத தேனீக்கள், உலவாத் தென்றல், பசியாத நல்வயிறு.' இருக்க முடியாதென்பதை அவர்கள் அறிய மாட்டார்கள்.

ஆனால், இவை அனைத்தும் ஒரு நன்மைக்கே! இனி, அவளை மணந்து கொள்ளும் போட்டிக்கு எவரும் வரமாட்டார்கள் இல்லையா? எனவே நீயும் வெண்ணிலாவும், இல்லற வாழ்வை விரைவில் துவக்கி விடுங்கள். என்னுடைய 'சாவு' என்னும் இப்பழைய துயருக்காக, உங்களின் புதிய கண்ணீரைச் செலவழித்துக் கொண்டிருப்பீர்களே யானால், பிறகு என் இறப்பு, பொருளும்-பொருத்தமும் இன்றிப் போய் விடும். அனைவருக்கும் என் இறுதி வணக்கங்கள்.

அன்பு நண்பன்,
இளவரசன்

மடலைப் படித்தவுடன் கண்ணீரைக் கொட்டின வேந்தனின் கண்கள். அவன் இதழ்கள் அவனையறியாமலேயே, "அவன், மாந்தனு இல்லை; தெய்வம்...தெய்வம் தெய்வம்!" என்று வாழ்த்துப் பாடியது. வெண்ணிலா மயக்கந் தெளிந்தாள். காவலர்கள் சென்று விட்டனர். இளவரசன் உடல் எரிக்கப் பட்டு விட்டது.

இரண்டாண்டுகட்குப் பிறகு-

'இளவரசா' என்றழைத்தான் வேந்தன். தன் குழலினும் இனிய குரலால் 'அப்பா' என்றழைத்துக் கொண்டு, 'அன்னை' வெண்ணிலாவிடமிருந்து தவழ்ந்து வந்தது, ஒரு சிறு குழந்தை. 0

நினைவில் வையுங்கள்

தனித்தமிழ் வளர்க்கும் இலக்கிய ஏடு

பூஞ்சோலை

இன்றே உறுப்பினராகுங்கள்

ஆசிரியர்: காரை-இறையடியான், காரை-அழகன்

ஆண்டுக் கட்டணம் 5 உருபா. தனிஇதழ் விலை 40 காசு.

பூஞ்சோலை, காரைக்கால்-1.

புன்செய்ப் புளியம்பட்டி

மறைமலையடிகள் மன்றம்

உடன்

அருள் நெறி மன்றம்

ஆகிய இரு மன்றங்களின் நோக்கங்கள்

1. தமிழ்நாடு, தமிழ்மொழி, தமிழர் சமயநெறி ஆகிய மூன்றையும் உடல், உள்ளம், உயிர் என ஓம்பிப் பணியாற்றல்.
2. தமிழ்க் கடல், மறைத்திரு **மறைமலையடிகளாரின்** நாடு, மொழி, சமயம் பற்றிய கொள்கைகளை முழுதும் ஏற்று இம்மூன்றும் பீடுற்றோங்கத் தொண்டாற்றுதல்.
3. பிறமொழி கலவாத் தூய தமிழ் யாண்டும் பரவ வேண்டுவன செய்தல்.
4. சமயப் பொதுநோக்கோடு தமிழர்தம் தூய சமய நெறிகளாகிய சிவனிய, திருமாலியக் கொள்கைகள் உலகெலாம் விளங்கத் தொண்டாற்றுதல்.
5. அன்பும், அருளும், இரக்கமும் ஓங்க இன்பமும் மகிழ்ச்சியும் எங்கும் தங்கப் பணியாற்றல்.

ஆற்றிவரும் பணிகள்

தமிழ்ப் பணிகள்:-

1 இலக்கியச் சொற்பொழிவுகள், பட்டி மன்றங்கள், ஆண்டு விழாக்கள் நடாத்துதல்,

2 மன்றவழி, தக்க புலவர்களைக் கொண்டு புலவர் வகுப்பு நடாத்துதல்.

3 தமிழ்க்கடல். **மறைமலையடிகளார், திரு. வி. க., கா. சு. பிள்ளை;** மொழிநூல் மூதறிஞர். **ஞா. தேவநேயப் பாவாணர்** போன்றோர் நூல்களை எல்லாரையும் படிக்குமாறு தூண்டுதல்.

4 தமிழில் பிறமொழி கலவாமல் எழுதவும் பேசவும் தூண்டுதல்.

5 குழவிகட்கும் இல்லங்கட்கும் தூயதமிழில் பெயரிடத்தூண்டுதல்.

6 பொதுமக்கட்குத் திருமண விழா, காதணி விழா முதலான அழைப்பிதழ்களையும், பிறவிழா அழைப்பிதழ்களையும் தூய தமிழிலேயே எழுதிக் கொடுத்தல்.

7 தமிழ்க்கடல், மறைமலையடிகள், தமிழ்த் தென்றல். திரு. வி. க. உலகமொழிப் பேறிரஞர். ஞா. தேவநேயப் பாவாணர் முதலான பெரியோர்களின் படங்களை வெளியிட்டு அடக்க விலைக்கே வழங்குதல்.

8 பெயர்ப் பலகைகளிலுள்ள வேற்றுமொழிச்சொற்களை அகற்றித் தூய தமிழில் எழுதுவிக்கச் செய்தல்.

9 ஊராட்சி மன்றத்தினரை அணுகித் தெருப்பெயர்கட்குத் தமிழ்ச் சான்றோர்களின் பெயர்களை வைக்குமாறு வேண்டுதல்,

10 தொடக்க, உயர்நிலைப்பள்ளிகளில் திருக்குறள், சிவபுராணம், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலக நீதி, வெற்றிவேற்கை, நல்வழி, வாக்குண்டாம் ஆகியநூல்களில் ஒப்பித்தல் போட்டிகள் வைத்துப் பரிசுகள் வழங்குதல்

11 பள்ளியிறுதி வகுப்பில் பயிலும் மாணக்க மாணக்கியர்கட்குத் தமிழ்மொழி பயில்வதில் ஆர்வத்தை உண்டாக்கப் பொதுத் தேர்வில் முதல் ஐந்து மதிப்பெண்கள் பெறுவார்க்குப் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்குதல்.

12 பள்ளிகள், பொதுநிலையங்கள், நூலகங்கள் ஆகியஇடங்கட்குத் தமிழ்ச் சான்றோர்களாகிய தெய்வப்புலவர். திருவள்ளுவர், தமிழ்க்கடல். மறைமலையடிகள், தமிழ்த் தென்றல். திரு. வி. கல்யாண சுந்தரனார், மொழிநூற் பேரறிஞர். ஞா. தேவநேயப் பாவாணர், பாரதியார், செக்கிழுத்த செம்மல், வ.உ.சிதம்பரனார் பாவேந்தர். பாரதிதாசன் முதலானோர் திருவுருவப் படங்களை அன்பளிப்பாக வழங்குதல்.

13 தமிழ்ச் சான்றோர்களின் திருவுருவப் படங்களையும் நூல்களையும் வாங்கி அடக்க விலைக்கும், தவணைமுறைக் கடனுக்கும் விற்றுப் பொது மக்கட்குத் தமிழறிவையும் உணர்வையும் ஊட்டுதல்.

14 தமிழ்ச் சான்றோர்களின் அருள்மொழிகள் தாங்கிய அஞ்சல் அட்டைகள், உறைகள் ஆகியவற்றை அச்சடித்து அடக்க விலைக்கே விற்பனை செய்தல்,

15 கோவை அரசினர் கலைக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் மறைத்திரு. ப. சு. மணியம் அவர்களைக் கொண்டு "திருக்குறள் வகுப்பு" [பரிமேலழகர் உரையுடன்] திங்களுக்கு ஓர் அதிகாரம் மேனி தொடர்ந்து நடாத்தி வருதல்.

16 பொருள் வளமின்றித்துன்புறும் தமிழ் அறிஞர் பெருமக்களுக்குத் திங்கள் தோறும் இயன்ற நன்கொடைகளை அனுப்புதல்.

17 தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கந்தரும் தீர்மானங்களை நிறைவேற்றித் தமிழக அரசு, புலவர் குழு, ஊராட்சி மன்றம் முதலானவற்றிற்கு அனுப்பி அவற்றைச்செயல்படுத்துமாறு வலியுறுத்தல்.

கல்விப் பணிகள்:

1 தொடக்க, உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் தாழ்த்தப்பட்ட பொருள்வளமற்ற மாணக்கர்கட்கு இலவச உடைகளும், பொத்தகங்களும் வழங்குதல், தனிக்கட்டணம் செலுத்த உதவுதல், அரசினர் உதவித் தொகையைப் பெற்றுத்தரல் முதலான உதவிகளைச் செய்தல்.

2 தமிழ்ப்பற்றும் தெய்வ ஒழுக்கங்களும் நிரம்பப்பெற்ற, பொருள் வளமில்லாத, பள்ளியிறுதி வகுப்பில் நிறைந்த மதிப்பெண்கள்

பெற்றுத்தேறிய மாணக்கர்கட்குக் கல்வி பயில அவரவர் நிலைக் கேற்ப உதவுதல்.

3 மன்ற வழிப் 'பாவாணர் படிப்பகம்' என்ற பெயரில் நூலகம் நடாத்தி மக்களின் பொது அறிவை வளர்த்து வருதல்-

பொதுப்பணிகள்:

1 பள்ளிப் பகல் உணவுத் திட்டம், பள்ளிக் கட்டிடங்கள், கோவில் திருப்பணிகள், உலகத் தமிழ்க் கழகம், புயல் – வெள்ளங்களால் ஏற்பட்ட அழிவுகள், மொழி சமயத்தொடர்பான விழாக்கள் முத லியவற்றிற்கு இயன்ற பொருள் உதவி வழங்கி வருதல்.

2 தாய் தந்தையரற்ற ஏழைக்குழந்தைகளை 'ஏதிலியர் இல்ல' த்தில் சேர்த்தல்.

இதுநாள் வரை வழங்கிய குறிப்பிடத்தக்க நன்கொடைகள்:

1 உலகமொழிப் பேரறிஞர், தேவநேயப் பாவாணரின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி வெளியீட்டுத் திட்டத்திற்கு
உருபா: 10,000-

2 பாவாணர் அவர்களின் 'இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்?' நூல் வெளியீட்டுக்கு உருபா. 1500-

3 தென்மொழி ஆசிரியர் தமிழ்த்திரு, பெருஞ்சித்திரனருக்கு (தென்மொழி வளர்ச்சிக்கு) உருபா: 2000-

4 பேரூர்ப் புலவர் சிவத்திரு. கந்தசாமிப்பிள்ளை அவர்கட்கு
உருபா: 1000-

5 புன்செய்ப் புளியம்பட்டி மகளிர் பெரும்பள்ளி தொடங்குவதற்கு
உருபா: 500-

6 புன்செய்ப் புளியம்பட்டிச் செல்வநாயகி கோவில் திருப்பணிக்கு
உருபா: 500-

சமயப் பணிகள்:

1 ஊரில் உள்ள முத்துப்பிள்ளையார், திருமுருகன், காமாட்சி அம்மை ஆகிய திருக்கோயில்களில் முறையே வெள்ளி, செவ்வாய், திங்கள் ஆகிய நாட்களில் கிழமைக்கூட்டு வழிபாடுநடாத்தி மக்கட்கு இறையுணர்வை ஊட்டி வருதல்.

2 திங்களுக்கு ஒருமுறை தக்காரைக் கொண்டு சமயச்சொற்பொழிவுகள், இசைச் சொற்பொழிவுகள், இசையரங்குகள் நடாத்தி வருதல்.

3 ஊரில் உள்ள முத்துப் பிள்ளையார் திருக்கோயிலில் சமயக் குரவர்கள் ஆகிய மணிவாசகர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் சுந்தரமூர்த்தி ஆகியோர் குருவழிபாடுகளை நடாத்தியும், அடியார் கட்கு அமுதளித்தும் அந்நாட்களில் சொற்பொழிவுகளும், இசை யரங்குகளும் நடாத்தியும் வருதல்.

4 சமயத் தொடர்பான சிறந்தநூல்களை வெளியிட்டுச்சமய அறிவை யும் உணர்வையும் வளர்த்தல்.

5 ஆண்டு தோறும் சில(மார்கழி)த்திங்களில் திருப்பாவை, திரு வெம்பாவை இசைத் தட்டுகளை வைகறையில் ஒலிபரப்பியும் தொடக்க உயர்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணுக்க, மாணுக்கி யர்கட்கு ஒப்பித்தல் போட்டிகள் வைத்துப் பரிசுகள் வழங்கியும் வருதல்.

5 ஊரில் உள்ள நூலகங்கட்கு மன்ற வழிச் சமய உணர்வூட்டும் சித்தாந்தம், குமரகுருபரன், ஞானசம்பந்தம், திருப்புகழமிர்தம், திருக்கோயில், ஆத்துமசோதி முதலான திங்களிதழ்களை நன் கொடையாக வழங்கி வருதல்.

7 சமயத் தொடர்பான சிறு வெளியீடுகள், நூல்கள்,மெய்யடியார் களின் திருவுருவப்படங்கள் ஆகியவற்றை வாங்கி அன்பளிப்பாக வும், அடக்க விலைக்கும் வழங்கி வருதல்.

8 திருக்கோவில்கட்கும், பொதுநிலையங்கட்கும் சமயச் சான்ருேர் படங்களை நன்கொடையாக வழங்கி அவ்விடங்களில் தெய்வ மணம் கமழும்படி செய்து வருதல்.

9 ஷெ இடங்களில் தெய்வ நெறிப் பாக்களைச் சுவர்களிலும் தகரங் களிலும் எழுதியும் மாட்டியும் மக்கள் உள்ளத்தில் பதியவைத்தல்.

10 திருக்கோவில்களில் கண்ணுடிப் பேழைகளில் திருமுறைகளை வைத்துத் திருமுறை வழிபாடாற்றச் செய்து வருதல்.

11 வீட்டுக்கதவு, நிலைப்பேழை முதலானவற்றின்மேல் ஒட்டுதற்கு ஏற்றமுறையில் "சிவ சிவ" 'ஓம் சிவாய" 'ஓம் முருகா' 'ஓம்சத்தி' முதலாய மந்திரச் சொற்களை அச்சிட்டு இலவசமாகவும் அடக்க விலைக்கும் வழங்கி வருதல். அத்தோடு மேலே கண்ட மந்திர மொழிகளை மிகுந்த எண்ணிக்கைகளில் எழுதும் சிருர்களுக்குப் போட்டிகள் வைத்துப் பரிசுகள் வழங்கி வருதல்.

12 கடவுளுணர்ச்சியூட்டும் ஆன்ருேர்களின் அருள்மொழி தாங்கிய அஞ்சலட்டைகள், உறைகள் ஆகியவற்றை அச்சிட்டு அடக்க விலைக்கு வழங்கி வருதல்.

13 ஆண்டுக்கு ஓர் அல்லது இருமுறை சிவனியக் கொண்முடிபு (சைவ சித்தாந்த) நூற்புலமைசான்ற பெரியார்களை அழைத்து வகுப்புகள் நடாத்தியும் வெளியூர்கட்குச் சென்று பாடம் பயின் றும் வருதல்.

14 புன்செய்ப் புளியம்பட்டித் தங்கசாலைத் தெருவில் உள்ள அரச மரத்து மேடைப்பிள்ளையார்கோவில், ஆசாத்துத்தெருவில்உள்ள அரசமரத்து மேடைப்பிள்ளையார்கோவில் ஆகியவற்றைப் பொது மக்களின் துணையுடன் திருப்பணிகள் செய்ததோடு அவற்றில் முறையாக நாள் வழிபாடு நடைபெற நிலையான ஏற்பாடு செய் துள்ளமை.

செ. சொ. பி. பேரகரமுதலி

உருவாக்க, வெளியீட்டுத் திட்டம்.

உறுப்பினர் பட்டியல்

திருவாளர்கள்:-- 1. தாமரை பெருஞ்சித்திரன், கடலூர்-1, 2. மா. பூங்குன்றன், கடலூர்-1. 3. புலவர் இறைக்குருவன். மதுரை-10. 4. இறை. பொற்கொடி, மதுரை-10. 5. காளியப்பன், (நாராயணன்) நெய்வேலி-1. 6. செ. பன்னீர்ச்செல்வம், சென்னை-2. 7, த. வளங்கோ, புதுவை-1. 8. செ. சித்தார்த்தன், அறி. இ. (பி.எசி.) சென்னை-25. 9. கி. மகிழ்கோ, புதுவை-5. 10. திருநாவுக்கரசு, பொ. இ. வேலூர்-9.

11. புலவர் சா. அடல் எழிலன், திருவையாறு. 12. ந. முத்துக் குமரன், அறி. இ. ஆ. ப. குளத்துப்பாளையம். 13. திருச்சி மாவட்டத்தான், 14. ந. செங்குட்டுவன், திருச்சி-14. 15. அருண்மொழியன், திருச்சி-14. 16. பொற்செழியன், (வே.நா. இரேணுகோபால்,) பெங்களூர்-1. 18. உணர்வுப்பித்தன், (ஆ. சொக்கலிங்கம்) திருச்சி-10. 18. உளங்கவரழகன், இராசிபுரம். 19. நாவை-சிவன். (தமிழ்மகன்) கீரனூர். 20. ச. கலியமூர்த்தி, காவேரிநகர்.

21. வே. மாறன், பெங்களூர்-2. 22. சி. பூ. மணி, பெங்களூர்-21. 23. க. அப்பாத்துரை, நடுப்பட்டி. 24. ச. சின்னத்துரை, நெய்வேலி-1. 25. அன்புவாணன், (த. கோவிந்தன்) நெய்வேலி-1 26. அ. அருள்நெறி, நெய்வேலி-2. 27. ஆ. கருப்பையா, நெய்வேலி-3. 28. இரா. அப்பாவு, நெய்வேலி-3. 29. இரா. பெருந்தேவன், நெய்வேலி-2. 30. மு. அறவாழி, நெய்வேலி-1.

31. பொன்-தமிழ்மாறன் (இராமசாமி), நெய்வேலி-1. 32. தமிழநம்பி, அறங்கண்டநல்லூர். 33. புலவர் பா. வீரப்பன், ஆனைமலை, 34. நா. இளமாறன், பெரும்பகல்லாக்குடியிருப்பு, 35. க. மலர்ச்

[முன் பக்கத் தொடர்ச்சி]

15 சவகர்ப் பெருவழியிலுள்ள அம்மையப்பர் கோவிலின்பொறுப்பை ஏற்றுக்கொண்டு நாள்வழிபாட்டிற்கு ஏற்பாடு செய்ததோடு தமிழ்நாடு தெய்வீகப் பேரவையின் உதவியுடன் திருமண மண்டபம் கட்டவும் திருப்பணிகள் செய்து புதிய கோவிலாக மாற்றவும் பெரிதும் முயன்று வருதல்.

16 பண்ணாராய்ச்சிப் பேரறிஞர், தென்னிந்தியச் செவ்விசைப்புலவர் குடந்தை இசைத்திரு. ப. சுந்தரேசனார் அவர்களைக் கொண்டு திருத்தொண்டர் புராணத் தொடர்இசைச் சொற்பொழிவுகளை (மூல பாடத்தைப் பாடி பொருளை விளக்குதல்) திங்களுக்கு ஒரு முறை தொடர்ந்து நடாத்தி வருதல்.

0

செல்வன், (தலைராசன்) மதுரை-1. 36. பர். பொ. இளங்கோ, உக்கரம். 37. செ. பெரிய நாடார், தெற்குச்சூரன்குடி. 38. சே. கு. அரசங்கோவன். மேட்டூர் அணை-1. 39. ஞா. தாமசு, மணிமுத்தாறு. 40. கே. பூபதி, பெங்களூர்-16.

41. துரை. சம்பத்குமார், க. இ. ஈரோடு-1. 42. அறவாழி, தளவாய்ப்பட்டணம். 43. இல. க. இரத்தினவேல், திருச்சிராப்பள்ளி-1. 44. சு. திருஞானம், திருச்சிராப்பள்ளி-1. 45. ஆம்பூர் கே. ஏ. மணவாளன், பெங்களூர்-5. 46. இர. பரணன், பரணம். 47. மு. வ. பரமசிவம், நடுப்பட்டி. 48. ம. சோசு; உத்தமபாளையம். 49. மு. திருநாவுக்கரசு, அண்ணாமலைநகர். 50. க. இராமசாமி, கோவில்பட்டி.

51. ஓ. பிச்சை, தெற்குத்தெரு, மேலூர். 52. இல. வேலரங்கன், சோமையனூர். 53 கெம்பீரம், பெங்களூர்-1 54. செ பெருமாள், கடத்தூர். 55 புலவர் வ. அரிஅரன், ஒண்டிப்புதூர். 56. ந தேவராசன், வேலூர்-1. 57. க. செகநாதன். பி.எசி. ஈரோடு. 58 இராசமாணிக்கம், காரைக்குறிச்சிப்புதூர். 59. வெ. கிழார், பெங்களூர்-21. 60. சா. பொழிலன், நெய்வேலி-2.

61. கா. சே. சாத்தப்பிள்ளை, பி. எசி. பி. டி. ஆமூர். 62. புலவர். கா. இளமுருகன், புன்செய்ப்புளியம்பட்டி. 63. ப. கு. முருகவேள், புன்செய்ப்புளியம்பட்டி. 64. புலவர் நா. அருணன், எரங்காட்டுப்பாளையம். 65 பா. அறவாழி, சென்னை-7; 66 அ. வெள்ளிமலையார், திருச்சிராப்பள்ளி-8; 67 சாலை. இளந்திரையன், எம்.ஏ. எம் லிட், புதிய தில்லி-5. 68 செ வெற்றிவேந்தன் (செயராமன்) நீலமலைத்தோட்டம்-இராசிபுரம்; 69. முல்லைவாணன், சிங்கை; 70 ந. இராசகோபாலன், தஞ்சாவூர்-1.

71 அகத்தி கிருட்டிணன், இ. அ (வேளாண்) சோளிங்கபுரம். 72 ஏ. கே. மணி, பி. இ, ஏ. எசு. எசு-1. பெங்களூர் 28 73 வே. ஐயனப்பிள்ளை, வேம்பனூர்; 74 வ. கௌரிநாதன், திருச்சி-14 75 எழிலரசன், திருச்சி-14 76 பொன்-தங்கவேலன், பெங்களூர்-15 77 தி. எழிலரசன், (இரமணி, மதுரை-3) 78 பொன்-மாறன், (இராமகிருட்டிணன்), மதுரை-3. 79 மறை-நித்தலின்பன், கோவை 80 தமிழ்க்கூத்தன், கருந்திட்டைக்குடி.

81 புலவர் ச. தமிழ்வேலன், மீஞ்சூட்சிபுரம். 82 அ. இளங்கோ பி. எசி. பி. டி. பெருமாம்பாளையம் 83 புலவர். த. மாணிக்கம். கூகலூர் 84 புலவர் திரு. மாரி. விசுவநாதன், வால்பாறை 85 பா. வளன்அரசு, க. மு. திருநெல்வேலி-2 86 கரு. பேச்சிமுத்து, திருச்சி 14 87 அ. சாமிக்கண்ணு, அரூர் 88 கே. அரசு, பெங்களூர்-21, 89 ந. சுப்பையா, அருமடல்; 90 த. சுப்பிரமணியன், செட்டிக்குளம்.

91 த. வையாபுரி, ஆனைமலை; 92 எசு. கே. எசு. காதர், அம்பாலா; 93 இர. சு. கிருட்டிணன், கீழ்த்தென்குலம்; 94 அ. மீ. இராமமூர்த்தி, திருவாரூர். 95. வை. வேதையன். திருவாரூர். 96. த. சரவணத்தமிழன், திருவாரூர். 97. மா. இறைவன், திருச்சி-14. 98. த. அன்பழகன், கடலூர்-1. 99. பெருஞ்சித்திரன், கெ. கல்லுப் பட்டி. 100. பெ. அன்னகாமு, கெ. கல்லுப்பட்டி.

101 க. நாராயணன், பெருகும்பகல்லாக்குடியிருப்பு; 102 வி. இராசமாணிக்கம், எம். ஏ. கோயமுத்தூர் 18; 103 மு. கதிரவன் நெமலி; 104 அ. கிருட்டிணசாமி, பெங்களூர் 21; 105 துரை-தெட்சிணாமூர்த்தி, மேலச்செம்மங்குடி; 106 க. சிவானந்தன், திருமலைராயன்பட்டினம்; 107 அரங்க-திருமாறன், புதூர், உரத்த நாடு; 108 க. அன்புமணி, திருச்சி 15; 109 கரி. நடவரசன், நெய்வேலி 3; 110 இரா. தமிழன்பன், வேப்பங்குறிச்சி.

111 ப. துரையரசன், கைகாட்டிப்புதூர்; 112 கோ. நிலவழ கன், க. மு. சென்னை 30; 113 க. சி. அகமுடைநம்பி, பி. இ, மதுரை; 114 சு. வலங்கைப்பாண்டியன் மதுரை; 115 சி. குமார சாமி, எல். எம். இ., மதுரை 116 பொன்-இராமானுசம், சுத்த மல்லி; 117 நெல்லை சு. மணியன், திருச்சி 2; 118 முத்து-செல் வன், அலசூர்; 119 ஆ. ப. தொல்காப்பியன், மொ. ஆலமரத்துப் பட்டி; 120 இரா. தங்கராசன், மாரம்பாடி.

122 ப. பெரியசாமி, விருதுநகர்; 122 பழங்கரைவேள். பழங்கரை; 123 30-ஆம் அணி இந்திய வான்படைத்தமிழன்பர்கள், 124 உ.த.க. பெங்களூர் நகரக்கிளை; 125 செ. தென்னவன், கவுண் டன் பாளையம்; 126 காரை-இறையடியான், காரைக்கால்; 127 காரை-அலீம், காரைக்கால்; 128 தே. நே. சித்திரச்செல்வி, ஆரூர் 129 புலவர் இ. தேவநேயச்சித்திரன், கீ அ. செங்கழுநீர்ப்பட்டு. 130 வே. மு. பொதியவெற்பன், செங்கழுநீர்ப்பட்டு.

131 ந. அரணமுறுவல், கீ. அ. நாயனூர்பாளையம். 132 த. முத்துக்குமரன். க. இ. பாம்பூர்; 133 ஆர். வேணுகோபால், புதுவை-1; 134 இரா. செயராமன், நெய்வேலி 2 135 திரு வாட்டி வேளாங்கண்ணி உரோசுமரி, தி. அத்திப்பாக்கம்; 136 தி. ஆ. சண்முகசுந்தரம், திருச்சி 1; 137 மு. இளம்பரிதி, உரத்த நாடு; 138 ப. இளம்வழுதி, உரத்தநாடு. 139 ந. இளமுருகன் அறி. இ. ஆ. ப. நீடாமங்கலம்; 140 பி. என். அப்பாசி கவுண்டர், காளிங்கராயன்புதூர்.

141 சிங்கை-செங்கோடன், அம்மாப்பேட்டை, தஞ்சை; 142 இரா. தமிழ்வாணன், நாயனூர்பாளையம்; 143 அ. தங்க ராசன், ஈப்போ, மலேசியா; 144 கு. அண்டிரன், நாயனூர்பாளையம்

[தெ. ஆ] 145 ப. தாயம்மாள் அறவாணன், சென்னை 29; 146 ச. பாண்டியன், ஈப்போ, மலேசியா; 147 பெ. புதுமைப்பிரியன், மலாக்கா; 148 புலவர் ஞா. நன்முல்லை, விரியூர்; [தெ ஆ] 149 இரா. வெற்றியரசு, நெய்வேலி 1; 150 ப. நன்முல்லை, சிங்கை.

151 இரா. அருட்குவை, நெய்வேலி 3; 152 அ. குமணன், சிங்கை; 153 இ. எசு. சி. மூர்த்தி, பெங்களூர் 16; 154 துரை அருண்மொழி, நெய்வேலி 1; 155 செ. மேதலைவன், நெய்வேலி 3 156 த. செகந்நாதன், அம்பலாப்படைவீடு; 157 இறைவாணன் சிங்கப்பூர்; 158 ப. தண்டபானி, கான்பூர்; 159 சே. கணபதி, மலேசியா; 160 புலவர்-குமர. தன்னொளியன், கண்ணமங்கலம், (வட ஆ. மாவட்டம்)

151 ஏ. செல்வராசு, கான்பூர் 8; 162 செந்தமிழ்ச்சேய், பொறி இ. அரசூர், தெ. ஆ. மாவட்டம்; 163. உடுமலைப்பேட்டை அன்பர்கள் அமைப்பாளர் கி. சீதாராமகுப்தா; 164. ம. துரைசாமி, பீடோங்-மலேசியா; 165 எம். ஏ. இளஞ்செல்வன், (எம். இராமு) பீடோங்-மலேசியா; 166 பெ.அரசு, மலாக்கா; 167 இரா. காளிமுத்து கோலாலம்பூர்; 168 மருத்துவர் சி. இராமச்சந்திரன், சேலம்; 169 பி. இலக்குவன், குவைத்து; 170 புலவர் கா. சு. சண்முகம், பல்லடம்.

171 புலவர் ப. சுப்பையன், நாச்சிப்பாளையம், திருப்பூர்; 172 புலவர் திருமேனி, நாகராசன் காரைக்கால்; |173 காரை-அறவாழி, காரைக்கால்; 174 மு. துரைச்சாமி, க. மா. அ. சுலுத்தான்பேட்டை, பல்லடம்; 175 க. தமிழப்பன், அ. அரங்கசாமி, திருப்பூர் 2; 176 சி. அறிவுறுவோன், அம்மையகரம்; 177 திருவாட்டி இராசேசுவரி செந்தில், அம்பாலா; 178 கல்லூார் மணியம். மலாக்கா, 179 பறம்பை. தென்னவன், பறம்புக்குடி. 180 பொ. பொன்னரசன், க. இ. மேலூர்.

181 அர. இராசேந்திரன், க. இ. குளத்துப்பாளையம், பல்லடம். 182 அதியமான், சா. முருகு, ஆசிரியர், அதியமான்குப்பம், திருமுதுகுன்றப். 183 மு. பொய்யாமொழி, காட்டுக்கூடலூர். (தெ. ஆ) 184 துரை-வேழவேந்தன், காட்டுக்கூடலூர். (தெஆ) 185 சி. இராசாங்கம், அறி. இளை. தஞ்சாவூர். 186 கு. பெருந்துரை, அதியமான்குப்பம். திருமுதுகுன்றம். 187 பொன். பகலவன், நெய்வேலி 3; 188 கோ. கண்ணன், நெய்வேலி 3; 189 பொன்-தமிழ்முல்லை, சிங்கப்பூர்-2; 190. கோவை மாவட்டத்தார்.

191 பா. சு. மணியன், சில்லாங்கு-9; 192 கோ. சாந்தலிங்கம், சில்லாங்கு-9; 193 வி. இராமாநுசம், பொறி. இ. நெய்வேலி-1, 194 இரா. ஆறுமுகன், பு புளியம்பட்டி; 195 மா. கவிச்செல்ல நடராசன், C/o 56. A. P. O; 196 இரா. விசுவநாதன், க. இ. (வணிகம்) தஞ்சாவூர். 0

0: 284: காலத்தால் அழியவிருக்கும் கன்னித் தமிழ்ப்பாவலரே! காலத்தை வெல்லும் கருத்துகளைப் படைக்கும் நும் முயற்சிக்குத் தூண்டுகோலாய் அமைய எமது சில எண்ணக்குவியல்கள்! தின்றதையே தின்று தெவிட்டுதலின்றி அன்றலரும் புத்தம் புதுமைகளை ஏற்றுச் செயல்படுத்துவீரா? இதழ்ப் பக்கங்களின் (வேண்டுமெனில் தரத்தைக் குறைத்தாவது) எண்ணிக்கையை நூற்றுக்குக் குறையாது மிகுதிப்படுத்த வேண்டும். இருபக்கங்கட்கு ஒரு முறையாக, வரையறுக்கப்பட்ட, வரம்பு கட்டிய பகுதிகளில் சிரிப்பதற்கு..., எண்ணுவதற்கு..., என்றவாறு மறைமலையடிகளார், பாவாணர், பெரியார், பேரறிஞர் அண்ணு ஆகியோரின் கருத்தோவியங்களை வெளியிடுக. வீரம், காதல் என்றவாறு அகத்துறை, புறத்துறைப் பாக்களுக்குத் தெளிவான, எளிதாய விளக்கத்தோடு கருத்துப்படங்கள் வண்ணக் கலவையில் கழகத் தமிழை வடித்தெடுக்க வேண்டும். பல்வேறு ஐயங்களைப் போக்கும் 'விஞ-விடைப்பகுதி' சேர்க்கப்படல்வேண்டும். அறிவியலின் துணைக்கொண்டு புராண இதிகாசப்புளுகுகளைப் 'பகுத்தறிவுப்பகலவன்' என்ற பகுதியிஞல் சுட்டெரிக்கவேண்டும். கற்பனை ஊற்று' என்ற பகுதியில் வரும் எறும்பி, இறைமைக்காட்சி போன்ற பழமையையும் மூடநம்பிக்கையின் முடைநாற்றத்தையும் இனிமேல் வெளியிடாது செய்மின்.

அழகன் அறி. இ., வளவன் க. மு., பூண்டி.

0: 285: இறைக்குருவஞரின் பாவை பற்றிய மதிப்புரையைப் படித்துப் பார்த்தேன். நன்ருகச் சீர்தூக்கி நடுநிலையோடு எழுதப் பட்டுள்ளது. தங்கள் (மெய்ம்மைப்பித்தன்) மெய்யுணர்வு பற்றிய நுண்ணுணர்வு ஆழமாக உள்ளது. காண முயன்றும் காணமுடியாத எரிச்சலில் தான் 'இறைவன் இல்லை' என்று மாந்தன் கூறத் தலைப் படுகிருன் என்று கூறியிருப்பது நல்ல கூர்மையான பார்வை. மாந்த மனத்தின் ஏற்ற இறக்கங்களைப் படம் பிடித்துக் காட்டுகிறது. இது போன்று இன்னும் எழுதுங்கள்.

சி. சத்தியமூர்த்தி க. மு. திருவனந்தபுரம்.

0: 286: நமக்குள் நாம் ஆசிரியவுரை படித்தேன். தொய்ந்து கிடந்த நாடி நரம்பனைத்தும் திமிர் பெற்றெழுந்தமை கண்டேன். இத்தகு பேருரைகள் தமிழினத்தின் மேம்பாட்டுக்கு விடும் அறை கூவல். கால்ங்காலமாய்க்கடைப்பட்டுநின்றுகண்ணீர்விடும் தமிழன் தங்களைப் போன்றவர்களால்தான் விழிப்படைய வேண்டும். இது போன்று இன்னும் பல உரைகளை எழுதி உய்யும் வழி உரைப்பீர். வியத்தகு சித்திரனின் வீர உரை கேட்டும் விழிப்படையாத் தமிழன் விபீடணத் தமிழனே என்பது என் போன்றவர்கள் கருத்து. கொழுந்து விட்டெரியும் தன்மானத்தீயை மேலும் நெய்யிட்டு வளர்க்க வேண்டுகிறேன்.

பொ. தங்கராசன், அரவக்குறிச்சி.

0: 287: திரு. தஞ்சை எழிலன்பன் அவர்களின் சிறுகதை நனி நன்று! அப்படிப்பட்ட சிறுகதைகளை எப்பாடுபட்டாகிலும் தென்மொழி ஓலை ஒவ்வொன்றிலும் தொடர்ந்து வெளியிட வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கின்றேன்.

அ. ஒளியவன், கருவூர்.

0: 288: 'தென்மொழி' யில் சிறு கதை ஒன்று வெளிவந்துள்ளது. தனித்தமிழால் முடியும் என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

(அடுத்தபக்கம் பார்க்க)

ஆயினும், மேலும், நயம், உணர்வுகள், திருப்பங்கள், நெறி, மற்ற இலக்கணங்கள்வாய்ந்த சிறுகதைகள்வெளியிடுவது தங்களின் தனித் தமிழ்த் தொண்டிற்கு அணி செய்வதாகும். இயலுமெனின் தனித் தமிழில் குமுகாய மேடுபள்ளங்களை அடிப்படையாகக் கொண்ட கதைப் புதினங்கள் வருவது சாலப்பொருத்தமாகும்.

மு. அந்தாலன், கள்ளக்குறிச்சி.

0: 289' முடியாட்சி முறையில் இருந்த கேடுகளைக் கண்டு, மாற்றாகக் குடியாட்சிமுறை மலர்ந்தது. அதற்குக் கட்சியமைப்பே அடிப்படையாகவும் அமைந்தது. ஒரே கட்சியோ, பல கட்சிகளோ கொண்ட அரசியல் அமைப்புகளே இன்றைய உலகில் வலிவு பெற்று உள்ளன. தனி மாந்தன் செய்யக்கூடாத கொலை, கொள்ளை இவற்றைச் சட்டத்தின் பெயரால், நாட்டின் பெயரால் நடத்த முடியும். அதனைத் தடுக்கக் கூடிய ஆற்றலோ, அத்தகைய ஆட்சியாளர்களைத் தண்டிக்கக் கூடிய சட்ட அமைப்போ இன்றைய அரசியல்—உலக அரசியல் அமைப்பால் இயலாது என்பதே நமக்கு வங்காளம் தரும் பாடமாகும்' இ:து இன்றையக் கட்சியமைப்பைக் கொண்ட அரசியலின் முழுத்தோல்வி—அடைக்க இயலாத ஓட்டை என்பதே எனது கருத்து. இத்தகைய தோல்வியடைந்த அரசியல் அமைப்பால் பயனும் இல்லை; காப்பும் இல்லை; என்று இருண்டு கிடந்த எனது உள்ளத்தில் ஒளிவிளக்கை ஏற்றி வைத்தது உங்களின் 'அரசியல்' பற்றிய விளம்பரம். நான் உங்களிடம் வேண்டுவதெல்லாம் 'அரசியல்' இதழை எவ்வளவு இயலுமோ அவ்வளவு விரைவில் வெளிக் கொணர வேண்டுமென்பதே.

சி. செந்தமிழரசு, அறி. இ. சேந்தன்குடி.

0: 290: அண்மையில் வந்த தென்மொழியின் ஓலை: 6-7 இதழைக்கண்டேன், அதில் தஞ்சை எழிலன்பன் அவர்களின் சிறுகதையொன்றை வெளியிட்டு அதற்குத் தாங்கள் குறிப்பும் எழுதியிருந்தீர்கள். அதில் தாங்கள் 'தமிழன் அடிநிலையைச் செப்பனிடாமலிருக்கும் பொழுது கதை பேசிக் கொண்டிருக்க வேண்டியதில்லை" என்று எழுதியிருந்தீர்கள். இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற இலக்கிய வடிவங்கள், சிறுகதைகள், புதினங்கள் என்றால்மிகையாகாது. அவற்றையே தாங்கள் தங்கள் கொள்கைகளைப் புகுத்துகின்ற வாய்க்காலாகப் பயன்படுத்தலாமே. தமிழனின் அடிநிலையைச் சீர்ப்படுத்த வேண்டிய செயல் முறைகளைச் சிறுகதைகளிலோ புதினங்களிலோ வைத்தெழுத இயலாதா? அத்துறைகளை அறவேஒதுக்காமல் அவற்றையும் வெளியிடுவது என்ற முடிவுக்கு வந்தீர்களே! அதே பாராட்டத் தக்கதாம். இதழ் முழுவதும் அறிவியற்கட்டுரைகளும், மொழியியற் கட்டுரைகளுமே நிறைந்திருந்தால் சுவையற்றுப்போய் விடுகின்றது. ஆகவே சிறுகதை இன்றியமையாதது என்பது தெளிவு. நம் கொள்கைகளையும், தமிழனின் அடிநிலையைச் செப்பனிடுவதற்கான வழிகளையும் வைத்துக் கதைகள் வரவேண்டுமென விரும்புகிறேன். ஆவன செய்வீர்கள் என நம்புகிறேன்.

சூ. நா. தமிழ்நெஞ்சன், சூலூர்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.